விலை 0—1—3 "UDAYAM" Weekly.

19 OCT 1946




வார வெளியீடு. ஆசிரியர் :— M. கந்தசாமி

மலர் 1 | திருவத்திபுரம் 15—9—46 வியஜய ஆவணியீ 30௳ ஞாயிறு | இதழ் 7

# வாழ்க பெரியார் ஈ. வே. ரா.!

## ஓங்குக பகுத்தறிவு! வீழ்க மௌடீகம்!



திராவிட நாட்டை ஆரிய இருள் கௌவிக்கொண்டிருந்த காலையில், மக்கள் தொட்டது தொண்ணூறுக்கும் அய்யரையே நாடி நின்ற நேரத்தில், திராவிட மக்கள் தன்மானமழிந்து மடமையில் மூழ்கி மயங்கிக் கிடந்த வேளையில், திராவிட மக்களை தட்டியெழுப்பி தன்மான உணர்ச்சி யூட்டிய மாவீரர் பெரியார் ஈ. வே. ராமசாமி ஆகும்.

இவரது பிறந்த நாள் வருகிறது நாளது 17-9-46ல். 67வருடம் முடிந்து 68வது வருடம் துவங்குகிறது அன்று [illegible] "வாழ்க பெரியார்!" என்று எங்கெங்கும் ஒலிக்கப்படும்.

பெரியார் அவர்கள் இவ்வளவு காலமாக திராவிட மக்களுக்காக பாடுபட்டார் என்பதை திராவிட மக்கள் உண்மையிலே உணர்ந்து நன்றி செலுத்த வேண்டுமென்றால், பெரியார் பிறந்த நாளன்று அவரது கொள்கையை ஊர்தோறும், வீதிதோறும், வீடுதோறும் பரப்ப வேண்டும். இதுதான் பகுத்தறிவாதிகள் செய்யவேண்டிய காரியமாகும்.

அன்றைய தினம் உறுதி செய்து கொள்ளவேண்டும், ஒவ்வொரு திராவிடத் தோழரும், பெரியாரின் கொள்கையை மனமாறப் பின் பற்றுவதாக.

இன்னும் நாட்டிலே மூடப்பழக்கங்களும், அறியாமையும், குருட்டு நம்பிக்கையும், மத ஆதிக்கமும், சாதி வெறியும், தலை விரித்தாடிக் கொண்டுதானிருக்கின்றன. இவைகளை ஒழிக்க இந்நாளில் திராவிட வாலிபர்கள் சூளுரைக்கவேண்டும்.

பெரியார் அவர்கள் இதுவரை எழுதியும் பேசியும் வந்தவைகளை ஒரு சிறு சிறு புத்தகங்களாக அச்சடித்து இலவசமாகவோ குறைந்த விலைக்கோ கொடுத்து மக்களை தட்டியெழுப்ப வேண்டும் அந்த நாளில்

இவைகளைச் செய்யாமல், பெரியார் அவர்களின் படத்தை எடுத்துக்கொண்டு ஊர்வலம் வருவதினாலும், வாழ்க பெரியார் என்று முழங்கி வருவதினாலும், வீடுகள்தோறும் படத்தை வைத்து அலங்காரப்படுத்துவதினாலும், அன்று ஏழை மக்களுக்கு கஞ்சி வார்ப்பதி னாலும் மட்டும் நமது கடமை நிறைவேறினதாக கருதக்கூடாது. பெரியார் எந்த பகுத்தறிவுக்காக இவ்வளவு பாடுபட்டு வருகிறாரோ அதையே அவர் முன்னிலையிலே குழிதோண்டி புதைப்பதாகும் இவைகளினால்.

எதைப்போற்ற வேண்டுமோ அதை போற்றாமல் எதை போற்றக்கூடாதோ அதைப் போற்றி வந்ததினால் தான் நம் நாடு இன்று இந்நிலையிலிருந்து வருகிறது; ஆரியம் அழிக்கப்படாமல் இருந்துவருகிறது. ஆரியத்தை அழிக்க இந் நாட்டில் எவ்வளவோ அரும் பெருங்காரியங்களைச் செய்திருக்கிறார்கள் பலர். அப்படியிருந்தும், ஆரியம் அழிக்கப் படவில்லை யென்றால், அதற்குக்காரணம் அவர்களது கொள்கைகளை உண்மைகளை மறந்துவிட்டு, அவர்களை மட்டும் வணங்கியும் பூஜித்தும் வருவதேயாகும். உதாரணமாக ஜைன மதத்தையும் பௌத்த மதத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்.

ஆகவே, அத்தகைய நிலையை யடைய பகுத்தறிவாதிகள் இடங்கொடுக்கக் கூடாது என்பதே நமது விருப்பம். அதற்காகவே, நாம் வேண்டிக் கொள்கிறோம் [illegible] பெருநாளில், நாடெங்கும் பரப்பவேண்டும் பெரியார் கொள்கையை யென்று.

★ ★ ★

பெரியார் அவர்கள் இதுவரை பேசியும் எழுதியும் வந்த அவரது கருத்துக்களின் சில பகுதிகளை கீழே தருகிறோம் உங்கள் சிந்தனைக்கு.

### சுயமரியாதை

"உண்மையான சுயமரியாதை உணர்ச்சி மக்களுக்கு தோன்றி விட்டால் அதுவே அரசியலையும் தேசியத்தையும் மற்றும் மத இயலையும் தானாகவே சரிப்படுத்திக்கொள்ளும். அப்போது சுயமரியாதை வேறு, அரசியல் வேறு, தேசியம் வேறு, மத இயல் வேறு, ஒழுக்க இயல் வேறு, அன்பு இயல்வேறு என்கின்ற பாகுபாடுகளும் பிரிவுகளும் கண்டிப்பாய் மறைந்தோடி விடும்.

உதாரணமாக நமக்கு மேலானதும் கீழானதுமான ஒரு வகுப்பு இருக்கக் கூடாது என்று சொன்னால், அந்த வார்த்தையிலேயே நமக்கு மேலானதாக ஒரு அரசாங்கமும் ஆட்சியும் இருக்கக்கூடாது என்பது தானாக உதயமாகிவிடும்.

அதுபோலவே நமக்கு மேலாகவோ கீழாகவோ ஒரு நாடு இருக்கக்கூடாது என்பதும் தோன்றிவிடும்.

பொதுவாக சுயமரியாதை என்கிற ஒரு இஞ்சினை பலப்படுத்தி சரியாக நடத்தக்கூடிய சக்தியை உண்டாக்கி வைத்துவிட்டால் பிறகு அதில் எந்த யந்திரத்தை (மெஷினை) கொண்டுவந்து அத்தோடு இணைத்து தோல்பட்டையை மாட்டினும் அந்தாளுகவே ஓடும்.

### பழக்க வழக்கம்.

"பழக்க வழக்கம் என்கின்ற பிசாசுகளை முதலில் ஓட்டிவிட வேண்டும்.

பழக்க வழக்கங்களைவிட வேண்டுமானால், மனிதன் பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுக்க தயாராயிருக்க வேண்டும்.

அப்படி பகுத்தறிவுக்கு மதிப்பு கொடுப்பவர்கள் கேள்வி மாத்திரத்திலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது.

எழுதிவைத்திருப்பதிலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது.

வெகுகாலமாக நடந்து வருவதாக தெரியவருவதினாலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது.

அனேகர் பின் பற்றுவதாலேயே நம்பிவிடக்கூடாது.

கடவுளாலோ மகாத்மாவாலோ சொல்லப்பட்டது என்பதாலேயே நம்பிவிடக்கூடாது. ஏதாவது ஒரு விஷயம் நம்முடைய புத்திக்கு ஆச்சரியமாய் தோன்றுவதாலேயே அதை தெய்வீகம் என்றோ மந்திர சக்தி என்றோ நம்பிவிடக்கூடாது.

எப்படிப்பட்ட விஷயமானாலும் நடுநிலைமையில் இருந்து பகுத்தறிவுக்கு தாராளமாய் விட்டு ஆலோசிக்கத் தயாராக யிருக்கவேண்டும்.

அப்படியிருந்தால் தான் கண்மூடித்தனமான பழக்க வழக்கம் முதலியவைகளை ஒழிக்கமுடியும்"

### மதம்.

"மதமானது இன்று உலகில் மனித சமூகத்தின் வாழ்வைத் துக்கமயமாக்கி ஜீவராசிகளில் மனிதனுக்கென்று உள்ள பகுத்தறிவை அடிமைப்படுத்தி, ஒற்றுமையைக் குலைத்து மனிதனுக்கு மனிதன் வெவ்வேறு 'இனம்' என்று எண்ணும்படி செய்து வருகின்றது"

இதன் தொடர்ச்சி 8-ம்பக்கம்

# யார் நாத்திகன்?

வி. நாகசுந்தரம்

"வேதத்தை சுருதி என்றும், தரும சாஸ்திரத்தை சுமிருதி என்றும் அறியத்தக்கது. அவ்விரண்டையும் தர்க்க யுக்தி கொண்டு மறுப்பவன் நாத்திகன் ஆவான்"

மேலே குறிப்பிட்டு இருப்பது நமது சொந்தச் சரக்கல்ல மானிட வாழ்க்கைக்கு வழி காட்டி, மக்களை முன்னேற்றும் மகத்தான சாதனம் என்று திராவிட மக்களால் நம்பப்படும் மனுநீதி சாத்திரத்தின் அத்தியாயம் இரண்டிலே, பத்தாவது சுலோகமாகக் காணக் கிடக்கிறது.

வேதத்தைச் சுருதி என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேதம் என்பது என்ன? மக்களை மடமைப் படுகுழியில் விழ்த்தி மாக்களாக்கி மறையோர்கள் உண்டு கொழுக்க, உத்தரம் போல் உடல் பெருக்க, உட்கார்ந்த இடம் விட்டு நகருமல் இருக்க. உத்தமர் என்று சொல்லப்படும் ஊதாரிகள் பலரால் உண்மைக்கு மாறாக, பகுத்தறிவுக் கொவ்வாததாக, முன்னுக்குப் பின் முரணாக எழுதப் பட்ட! சொல்லப்பட்ட!! விஷயங்களுக்குத் தான் வேதம் என்ற பெயர்.

இந்த வேத நாடகத்தின் நடிகர்கள் யாவர்? சிவன், விஷ்ணு, பிரம்மா, இந்திரன், அக்கினி முதலானவர்கள். இவர்கள் செய்த அயோக்கியத் தனங்களை திருவிளையாடல் என்ற புனிதமான பெயரில் வெளியிட்டு மக்களை நம்பச் செய்து அவர்கள் வாழ்க்கையை, செல்வத்தை, அரசியலை, அலங்கோல மாக்கிய அற்புத மகாசாஸனத்திற்குத்தான் வேதம் என்ற பெயர்.

அந்த 'அற்புத' மகாசாஸனத்தின் உண்மை உருவை எடுத்துக் காட்டிய உத்தம சமணர்களுக்கு கழுமரங்கள் தேடிக் கொடுத்து அந்த கழுமரங்களை பலி பீடங்களாக்கிய பாக்கியத்தை எது அடைந்ததோ அதற்குத் தான் வேதம் என்ற பெயர்.

அந்த உத்தம சமணர்களின் குருதி பாய்ந்து பலி பீடத்தினருகே இரத்தத் தடாகம் ஏற்பட்டதற்கு எது மூலகாரணமாக இருந்ததோ அதற்குதான் வேதம் என்ற பெயர்.

இனி தரும சாத்திரம் எது என்று காணலாம். மக்கள் வாழ்க்கையில் மாசு படராதபடி, அநீதியின் அவலட்சண ஆட்சி அம்மக்களை அடையாதபடி, அறங்காக்கும் அன்பு நிலைக்கச் செய்து, அழகு முறைகள் வகுக்கப்பட்ட 'அற்புத' சாஸனம் இருக்கிறதே அதற்குத் தான் தரும சாஸ்திரம் என்று பெயர். ஆனால் இங்கு இப்பொழுது நம்பும் ஆரியரின் அலங்கோல சாஸ்திரத்தை நம்பும் நம் மக்கள் அச்சாத்திரங்களிலே நீதியுண்டா? நேர்மை யுண்டா? என்று சற்றுவது சிந்தித்ததுண்டா? சிந்திக்கும் ஆற்றல் நமக்கு வந்து விட்டால் சித்தத்தை சிவன்பால் செலுத்த வேண்டிய நிர்பந்தம் இருக்காது.

அந்தச் சாத்திரங்களிலே நீதியில்லை; சாதிக்கொரு நீதி தலைவிரித்து தாண்டவமாடுகிறது என்பதை, உலகரட்சகன், உளகளந்த உத்தமன், துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் பண்ணும் பரமாத்மா என்று சொல்லப்படும் விஷ்ணு, அர்ச்சுனனுக்கு உபதேசித்த உத்தம கீதையிலிருந்தும், மனுவின் மகத்தான தரும நீதி என்று சொல்லப்பட்டு வரும் மனுநீதியிலிருந்தும் சில எடுத்துத்தருகிறேன் அன்பர்கள்வாசித்துத் தங்கள் கருத்துத்தெளிய! மூட நம்பிக்கைகளை முறியடிக்க!!

உதாரணம்: 1

"ஸ்ரேயான் ஸ்வதர்மோ விகுண:
பரதர்மாத் ஸ்வனுஷ்டி தாத்
ஸ்வதர்மே நிதனம் ஸ்ரேய !
பரதரமோ பயாவஹ"

(பகவத்கீதை அத்தியாயம் 3 [சுலோகம் 35.)

இதன் பொருள்:—ஸ்வதர்மம் = தன் குலத்திற்குரிய தொழில் இழிவான தாசனும நடை முறையில் கஷ்ட முடையதாகவும் இருந்தாலும், அதையே செய்தாக வேண்டும். பரதர்மம் = பிற குலத்தினரின் தொழில் எளிதில் செய்யக் கூடியதாக இருந்த போதிலும் அதை செய்வது முறையாகாது தன்குலத் தொழிலைச் செய்து மரணம் வரினும் அது சிறந்ததே! பிற குலத்தினரின் தொழில் பயத்தை உண்டு பண்ணுவதாகும்.

உதாரணம் 2

பிராமணன் எத்தகைய கொடிய குற்றங்களைச் செய்தாலும் அவனுக்குத் தூக்குப் போட வேண்டிய நிபந்தனை ஏற்பட்டால் அவன் தலையை மொட்டை யடித்தல் வேண்டும். அதுவே அவனுக்குத் தூக்குத் தண்டனைக்கு ஒப்பாம். மற்ற வர்ணத்தார்க்கு (சாதியாருக்கு) கொலையே தண்டனை.

மனுநீதி அத்தியாயம் 8 சுலோ [கம் 379.

உதாரணம்: 3

கொடிய குற்றம் செய்தவனுயினும் பிராமணனைக் கொல்லாமலும் மற்ற எத்தகைய துன்பத்திற்கு ஆளாக்காமலும் அவன் பொருளைக் கொடுத்து அயலூருக்கு அனுப்ப வேண்டும்.

மனு. அத். 8 சு. 380

உதாரணம்: 4

அரசனுனவன் பிராமணனை எத்தகைய கொடுங் குற்றத்திற்கும் கொல்ல நினைக்கக் கூடாது.

மனு. அத். 8 சு. 381

பார்த்தீர்களா எப்படி இருக்கிறது நீதி! நேர்மை!! நியாயம்!!! இதற்குத்தான் தரும சாஸ்திரங்கள் என்ற புனிதமான பெயர்.

இந்த ஆபாசக் களஞ்சியங்களை எவன் தர்க்க யுக்தி கொண்டு மறுக்கிறுனே அவன் நாத்திகன் ஆகிறுன் ஆரியர் சட்டப்படி.

சிவன் தாருகா வனத்தில் செய்த தகாத செய்கையையும் (அவ்வனத்தில் உள்ள ரிஷி பத்தினிகளை கற்பழித்தது) பிரமன், சிவன் கல்யாண மண்டபத்தில் புரோகிதனுக இருந்து கொண்டு புரிந்த புகல முடியாத செய்கையையும், பதினுயிரம் கோபிகாஸ்திரிகளுடன் கொம்மாளம் அடித்த குணவான்! ஒரு குற்றமும் செய்தறியாத (ஒருவேளை மாபலி கேட்பவர்களுக் கெல்லாம் 'இல்லை' என்று சொல்லாமல் தருமம் செய்தது தவறுனல் அது தான் குற்றமாக இருக்க வேண்டும்) மாபலி சக்கரவர்த்தியை அசுரன் (திராவிடன்) என்ற ஒரே காரணத்திற்காக சதி செய்து கொன்ற கொலை பாதகனுகிய விஷ்ணு என்னும் வீணன் முதலிய தேவர்கள் நடத்திய அலங்கோல காமசேஷ்டைகளைத் திருவிளையாடல்கள் என்றுல் உண்மையான திருவிளையாடல் தான் எது?

இவைகளைப் படித்து வெறுப்புற்ற திராவிடத் தோழன் இது அற்பத்தனமல்லவா? கடவுள்கள் என்று சொல்லப் படுபவர்கள் மானிட வர்க்கத்தைவிட மகாப் பெரிய காமச்சித்தம் கொண்ட கயவர்கள்மாதிரி தெரிகிறதே! இது கடவுளின் லட்சணத்திற்கு பொருத்தமாக இல்லையே!! இது அநீதி தானே! இதற்குத்தானு வேதம் என்ற பெயர்? என்று கேட்டு விட்டால் அவன் நாத்திகன்.

"ஒருவன் தன் குலத்தொழிலை செய்வதில் வெறுப்புற்று வேறு தொழில் செய்ய விரும்புதல் கூடாது. அவன் அந்தத் தொழிலைச் செய்தே மரணமடைய வேண்டும்" இது தான் கீதா இரகஸ்யம். கீதையின் பாதை முட்கள் நிறைந்த காட்டுப் பாதை. கீதையின் பாதை இழுக்கு நிறைந்தது.

இதைப் படித்தவன் இது எந்த நீதியின் பாற்பட்டது? இதற்கு தர்ம சாஸ்திரம் என்று பெயரானுல் உண்மையான தரும நூலான திருக்குறளுக்கு என்ன பெயர் வைப்பது? இந்த அநாசாரம் பிடித்த அபத்த வாக்கியங்களை இன்னும் மக்கள் படிக்கும் படி விட்டு வைத்திருக்கலாமா? என்று கேட்டால் அவன் நாத்திகன்.

சாதிக்கொரு நீதி! ஓர் இனம் வாழ வகை தேடி மற்றோர் இனத்தை இழிவு படுத்தி அதை முன்னேற விடாமல் செய்ய எண்ணிய மூர்க்கக் குணம் படைத்த மனு சொல்லிய பிதற்றல்களுக்கு நீதி என்று பெயரானுல், நன்னெறி ஔவையின் அமுத வாக்கு இவைகளுக்கு என்ன தான் பெயர்?

இது அக்கிரமமல்லவா? இனத்துவேஷம் கொண்ட இழி மதியினன் இயற்றியதை இன்னும் வைத்திருக்கலாமா? அடுக்குமா? என்று ஒருவன் கேட்டுவிட்டால் அவன் நாத்திகன்.

தோழர்களே!

ஆயிரம் பொய்க் கதைகளை நம்பி 'அற்புதமான' ஆத்திகன் என்று பெயர் பெறுவதைவிட உண்மையானவனுக, சிந்தனைக்குச் சித்தம் சலியாதவனுக, பகுத்தறிவுக்குப் பக்க பலமான ஆராய்ச்சியாளனுக இருக்கும் ஒரு நாத்திகன் எத்தனையோ மடங்கு அந்த 'அற்புத' ஆத்திகனை விட மேலானவன் என்போம்.

"ஒரு மனிதன் தேவைக்கே
இந்தத் தேசம் உண்டென்றுல்
அத்தேசம் ஒழிதல் நன்றும்."

என்றுர் நமது கவியரசர் பாரதிதாசன். அதுபோல்

"ஒரு இனத்தின் வாழ்விற்கே
இந்த நூல்கள் உண்டென்றுல்
அந்நூல்கள் அழிதல் நன்றும்.

என்று நாம் எண்ணிக் கொண்டு அந் நூல்களின் அயோக்கியத் தனத்தை மக்களிடம் பிரசாரம் செய்து அவர்களை நல்வழிப் படுத்துவது நமது கடன்.

குறிப்பு:—பகவத்கீதை, மனுநீதி இவைகளின் சுலோகங்கள் சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள் எழுதிய "மத விசாரணை" "மனுநீதி விளக்கம்" என்னும் புத்தகங்களிலிருந்து கொடுக்கப் பட்டதாகும்.

## நாகம்மையார் உதயம்

சென்ற ஆண்டில் பெரியார் தலைமையில் தன்மானத் திருமணம் செய்து கொண்ட திருவத்திபுரம் தோழர். **தணிகை உலகநாதன் கமலா** அவர்கட்கு 30-8-46 வெள்ளி யன்று இரவு 11-30 மணிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு **நாகம்மையார்** என்னும் பெயர் சூட்டப் பெற்றது. இக்குழந்தை பிறந்ததின் நினைவாக பெரியார் அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் நாகம்மையார் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் தோழர் மாவண்ணு. தேவாசன் அவர்களால் இயற்றப்பெற்று திருவத்திபுரம் ஸ்ரீ இலக்ஷ்மி நூல் பதிப்பகத்தில் விரைவில் வெளிவரும் எனத் தெரிகிறது.

# கட்டாயக் கல்வி

நாட்டிலே கட்டாயக் கல்வியைப் புகுத்துவதற்குமுன், இவ்வளவு வருடங்களாக கோடிக் கணக்கில் பணம் செலவாகியும் கல்வி பரவ வில்லை; கற்றவர்களின் தொகை உயர வில்லை; இதற்குக் காரணம் என்ன என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்றும்,

இதற்கு முக்கிய காரணங்கள் கல்வி கற்பதின் நோக்கம் மாற வேண்டும் என்றும்,

பள்ளிப் படிப்பு முடித்தபின் கல்வியை வளர்க்க வழி இருக்க வேண்டும் என்றும் எழுதியிருந்தோம்.

மேலும், கல்வி கற்பிக்கிற ஆசிரியர்கள் நிலையுயர வேண்டும் என்றும்; அவர்கள் மனக்குறைகள் நீங்கா முன் கல்வியில் முன்னேற்றங் காணமுடியாது என்றும் எடுத்துக் காட்டியிருந்தோம்.

இப்பொழுது பொருளாதார நிலை அதாவது வறுமை, கல்வி முன்னேற்றத்தை எவ்வாறு தடுத்துவருகிறது என்பதைச் சற்று விளக்க ஆசைப்படுகிறோம்.

மக்களின் பொருளாதார நிலையுயர்வடையா முன் கல்வியைப் பரப்பமுடியும் என்று எண்ணுவது வீண் எண்ணமேயாகும்.

இந்நாட்டில் பெரும்பாலான மக்கள் தரித்திர 'நாராயணர்கள்'. அன்றாட வயிறு கழுவுவதே பெருங்கஷ்டமான நிலையிலுள்ளவர்கள் எத்தனையோ குடும்பங்கள் அரை வயிறு, கால்வயிறு கஞ்சி குடித்துக்கொண்டு வாழ்வதைக் காணலாம். தொட்டிலிலும் கட்டிலிலும் கிடக்கும் பிள்ளைகளையும் முதியோர்களைத் தவிர ஆணும் பெண்ணும் சிறுவரும் சிறுமிகளும் வெயிலென்றும், மழையென்றும் பாராமல் நாள் முழுவதும் உழைத்தால்தான் அந்த அரை வயிற்றுக் கஞ்சியும் கால் வயிற்றுக் கஞ்சியும் கிடைக்கும்.

கிராமங்களில் வாழும் ஏழை மக்கள் ஏதோ இரண்டொரு ஆடு மாடுகள் வைத்திருப்பார்கள்; ஒரு சிலருக்கு கை அகல காடு இருக்கும்.

பெரியவர்கள் பிழைப்பைத் தேடிபோய்விட்டால், இந்த ஆடு மாடுகளை மேய்க்கும் தொழில் காட்டில் வேலை செய்யும் தொழில் சிறுவர் சிறுமிகளையே சேரும். இவைகளுக்கு அவ்வேழை மக்களால் ஆள்வைத்துப் பார்த்துக் கொள்ள முடியாது. குடும்பத்தைச் சேர்ந்த பெரியவர்களும் சிறியவர்களும் இவ்வாறு கஷ்டப்பட்டால் தான் உயிர்வாழ முடிகிறது.

இத்தகைய குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் கல்வி கற்பது எங்ஙனம்? கட்டாயப் படுத்தி சேர்த்தால், ஒரு நாள் பள்ளிக்கூடம் வந்தால் 10 நாளைக்கு வர மாட்டார்கள். அவர்கள் மீது என்னகுறை சொல்வது? அவர்களின் பொருளாதார நிலை—வறுமை அப்படிச் செய்யச் செய்கிறது. இவ்வாறு தடுக்க முடியாத நிலையிலுள்ளவர்களை, பிள்ளைகளை படிக்க வைக்காத குற்றத்திற்காக அபராதம் விதிப்பதென்பதோ தண்டிப்பதென்பதோ மனிதத் தன்மையா என்று கேட்கிறோம். இத்தகையவர்களின் பிள்ளைகளுக்கு ஒரு நேரம் சோறு போட்டு விடுவதாலோ புத்தகம் சற் பலகை வாங்கிக் கொடுப்பதினாலோ கல்வியைப் பரப்பி விட முடியுமா?

உபாத்தியாயர்கள் சம்பள உயர்வு கேட்டால், பிள்ளைகளின் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று சொல்லும் சர்க்கார், சற்க வசதி யில்லாத பிள்ளைகளுக்கு சோறு போட்டு கற்றுக்கொடுக்க முன்வருமா?

எனவே, நாட்டிலே கல்வி பரவ வேண்டுமானால், நாட்டின் பொருளாதார நிலைமாற வேண்டும். பிள்ளைகள் நாட்டின் சொத்துக்கள் (assets) என்று கருதப்படவேண்டும். சொத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு சொத்துடையவனுக்கு எவ்வாறு ஏற்படுகிறதோ அதுபோல் பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் கல்வி வளரமுடியும். இதைச் செய்ய இந்தச் சர்க்காருக்குத் துணிவு ஏற்படுமா?

---

சிறுகதை:—

# விஜயா !

(ம. கோ. கரிகாலன்)

கண்ணே விஜயா, உனக்கு நல்ல வரன் வந்து இருக்கு என்றார் கிழவர் கணபதியா பிள்ளை. ஆனந்தம் ததும்ப சொல்லிக் கொண்டே உள்ளே வந்தார்.

எனக்கேனப்பா இதுக்குள்ளே கலியாணம் என்று இடியோசைக் கேட்ட நாகம்போல் கம்மிய குரலில் பதில் சொன்னாள் விஜயா.

கணபதியா பிள்ளை ஆனந்தத்துடனும், விஜயா கம்மிய குரலுடனும் பேசகாரணம் இருக்கிறது. கணபதியா பிள்ளை ஓர் ஏழை; தாசில்தார் ஆபீசில் ஓர் குமாஸ்தா. விஜயா மூன்று வயது குழந்தையாக இருக்கும்போது அவர் மனைவி கனகம் இறந்து போனாள். பிறகு அவர் நண்பர் வேதாசலம் உதவியால் இரண்டு ஆண்டு கழித்து, பள்ளியில் சேர்க்கப்பட்டாள். சென்ற ஆண்டுதான் B. A., பரீட்சையில் தேறினாள். இன்று புதிதாக வந்த தாசில்தார் R.K. பிள்ளை, கணபதியா பிள்ளையின் பெண் படித்த அழகி என்று யாராலேயோ அறிந்து, கணபதியாவிடம் தனக்கு அப் பெண்ணை கட்டி கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார்.

R K. பிள்ளைக்கு வயது 50 ஆகிவிட்டது. ஆனால் அவர் சாப்பிடும் டானிக்,பழவர்க்கங்களின் துணையால் 20 ஆண்டு குறைந்தவராகவே தன்னை எண்ணி இருந்தார். அவரின் தலையையும் மீசையையும் கூந்தல்மை (Hair-dye) நிறம் மாற்றி வைத்திருந்தது. அவர் தனக்கு பெண் வேண்டும் என்று கேட்கும் போது, அவரின் பெரும் சொத்து கணபதியாவை கண்டு கண் சிமிட்டவே கணபதி அதன்மேல் காதல் கொண்டு பிள்ளைக்கு வாக்கு கொடுத்து விட்டார். தன் மகள் ஓர் தாசில்தார் மனைவி ஆகப்போவதை எண்ணித்தான் ஆனந்தம் கொண்டார்.

விஜயா கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போது அவளுடன் நடராஜன் படித்து வந்தான்; திவான் பகதூர் சரவண பிள்ளையின் ஏகபுத்திரன். விஜயாவின் உள்ளத்தை அள்ளிய காதலன் அவன்தான். B. A., படித்து முடித்தனர் இருவரும். விஜயா கோவை வந்துவிட்டாள். நடராஜன் தந்தையிடம் தன் மனக் கருத்தைத் தெரிவித்தான். ஆனால், சரவண பிள்ளை மடையா! நம் அந்தஸ்து என்ன? அந்த நாய் அந்தஸ்து என்ன? உன்னை கட்டி தீனிப்போட்டு, படிக்க வைத்த நானே உன்னை கலியாணம் செய்துக்கொள் என்பதா? நீ என்னிடம் வந்து கலியாண விஷயம் பேசுவதா? வேண்டுமானால் ராவ்பகதூர் இராமசாமி பிள்ளை மகள் இருக்கிறாள் படித்தவள்தான். அவளை கட்டிக்கொள் என்றார். தந்தையை என்றும் எதிர்த்தறியாத அவன் தலை குனிந்த வண்ணம் கண்ணீர் உகுத்து திரும்பினான்.

ஓர் நாள் விஜயாளுக்கு கடிதம் வந்தது, அதில்தான் இராணுவத்தில் சேர்ந்துவிட்டதாயும், விடுமுறையில் வந்ததும் கட்டாயம் மணப்பேன் என்றும் நடராஜன் எழுதி இருந்தான். அதை கண்ட விஜயா, நடராஜன் வரும் போது, கேப்டன் ஆகவோ கர்னல் ஆகவோ வருவான், வந்து நம்மை மணப்பான் என்று மனப் பால்குடித்துக்கொண்டு இருந்த நாளிலே கணபதியாவின் புதிய வரன் சொல்கேட்டு விஜயாவின் குரல் கம்மியது.

அதற்குள் எனக்கேனப்பா கலியாணம் என்று விஜயா சொன்ன போது, கணபதியா சிரித்துக் கொண்டே பேதைப்பெண்ணே, எனக்கோவயதாகி விட்டது, உன்னையாருக்காவது கட்டத்தானே வேண்டும்? அதுவுமில்லாமல், விஜயா, உன்னை மணக்க போகிறவர் தாசில்தார், பெரும் செல்வந்தர், நல்ல அழகர், உனக்கேற்ற உயரம், பருமன்....என்று பலவாறு புகழ்ந்து பேசிக் கொண்டே போனார். தாசில்தார், செல்வர் நமக்கு அவர் கணவன் ஆவதா காலேஜ் காதலன் கணவன் ஆவதா? என்று அவள் மனதில் ஓர் கடும் போராட்டம்.

விஜயா, இந்த நல்ல தருணத்தை கை விடாதே, தாசில்தார், செல்வர். ஆம், உலகில் மனிதன் மனிதனாய் வாழவேண்டுமானால் பணம்தான் வேண்டும். நடராஜனும் பணக்காரன்தான். ஆனால், தந்தை விரோதி. ஆகையால் நீ என்ன சுகத்தை அவனிடம் எதிர்பார்க்கிறாயோ அதற்கு மாறாக துக்கத்தையும், பட்டினியையும் தான் அடைவாய். நீயோ படித்தவள், அவரோ தாசில்தார், அவனோ சிப்பாய், நீயோ நாகரிகமான பெண், அவரோ பணக்காரர், அவனோ திரும்பி வருவதே நிச்சயம் இல்லை. ஆகையால், உன் தந்தை சொல் கேள், சம்மதம் என்றுச் சொல் என்று அவள் மனம் பல பல எண்ணியது. முடிவில் விவாகத்திற்குநாள் வைத்தாய் விட்டது. மணமகன் R. K. பிள்ளையை மணமகள் விஜயா புலவாறாக கற்பனை செய்து மகிழ்வாள். ஆனால், R. K. பிள்ளையின் வயது 50, நரையை மறைப்பது கூந்தல்மை என்பது அவளுக்கு என்ன தெரியும்?

சென்னை தியாகராய நகரில் "பிள்ளை மாளிகை" அன்று புராண ஆசிரியர் வர்ணிக்கும் தேவ லோகமும் அதற்கிணை இல்லை என விளங்கியது. பலரக மோட்டார்கள் அம்மாளிகையை சுற்றி இருந்தன. பலர் கோச்சுகளிலும் வந்து இறங்கிக்கொண்டிருந்தனர். அழகிய பட்டு வர்ண சேலைகளை கட்டிய பெண்களால் செல்லாராம் ஷாப் விளம்பரமாகியது. புது மாதிரியான நெக் லேஸ் எனும் அணிகளும், மற்றும் பலவித நகைகளை அணிந்து இருந்தனர், "சுராஜ்மல்ஸ்" பாபுலால் கடைகளை சுட்டிக் காட்டிக்கொண்டிருந்தனர். வாலிப யுவதிகளின்மேல் இளைஞர்கள் காணாதுபோல் விழுந்து "சாரி" என்ற மன்னிப்பு பெற்றுக்கொண்டும், மூட்டை மூட்டையாக பார்ப்பனர் தூக்கி செல்லும் அரிசி, துணிகளை கண்ட சீர்திருத்தக்காரர்கள் என்ன கலியாணமய்யா இது? என்று மனம் கசிந்தும், பட்டினி கடவுள் பக்தர்களான ஏழையர் இந்த ஆடம்பர காட்சியைக் கண்டு கடும் கோபத்துடன் கண்ணீர் உகுத்தும் கூடியிருந்தனர் ஒரு புறம்.

(தொடரும்)

சேழி கூவிற்று! வையம்,
கொண்டதோர் இருளைத், தங்க
மேழியால் உழுதான் அந்த
விரிகதிர்ச் செல்வன்; பின்னர்
ஆழிசூழ் உலகின் காட்சி
அரும்பிற்று! முளைய விழ்ந்து
வாழிய வையமென்று
மலர்ந்தது காலை வானம்!

—புரட்சிக்கவி பாரதிதாசன்

# உதயம்

மலர் 15—9—46 இதழ் 7

## ஒரே வழி

கண்ணன் காட்டும் வழியல்ல; கருத்து காட்டும் வழி.

கல்கத்தாவிலும், பம்பாயிலும் நடந்த கலவரங்களில் நூற்றுக் கணக்கான பேர்கள் கொலைக்கும் குத்துக்கும் ஆளானார்கள். ஆயிரக் கணக்கானவர்கள் படுகாயமடைய நேரிட்டது. எத்தனை சகோதரிமார்கள் தங்கள் கணவர்களை இழந்து வாடுகிறார்கள்? எவ்வளவு குழந்தைகள் தங்கள் பெற்றோர்களை பறி கொடுத்து தவிக்கின்றன? எவ்வளவு பெற்றோர்கள் தாங்கள் பெற்று வளர்த்த மக்களை இழந்து கலங்குகிறார்கள் என்பதையாரே அறிவர்?

இவ்வளவு கோரமான காட்சியைக் கண்டபிறகும், நாட்டிலே இன்னும் இக்கோரக் காட்சி தோன்ற யார்தான் சம்மதிப்பார்கள்? மக்களிடத்தில் கடுகளவாவது அன்பு இருக்குமானால், இத்தகைய நிலைமை ஏற்படாது தடுக்க என்ன செய்ய வேண்டுமோ அதைத்தான் செய்வார்கள்.

ஏனெனில் இத்தகைய கலவரங்களால் மாண்டுமடிகிறவர்கள் நிரபராதிகளான இந்நாட்டு மக்களேயாவர்; நாம் எந்த வெள்ளையனை துரத்திவிட்டு சுதந்திரமாக வாழ வேண்டுமென்று நினைக்கிறோமோ அந்த வெள்ளையனை விட்டு விட்டு, நமக்குள் நாம் அடித்துக்கொண்டுமாளுவது நேர்மையாகுமா? இதனால் யாருக்கு லாபம்? இன்று வங்கத்திலும் பம்பாயிலும் பிரிட்டிஷ் துருப்புகளின் துணையை அந்நாட்களில் நாடினதாலல்லவா நாம் நாடிழந்து நகரமிழந்து நாயினும் கீழாய் உழல்கின்றோம். நாம் இன்று அந்நியனுக்கு அடிமையாயிருப்பதற்குக் காரணமும் அன்று பிரிட்டிஷ் படைகளின் துணையை நாடி நின்றதல்லவா?

உண்மையிலே, இந்நாட்டின் சுதந்திரத்தை விடுதலையை நாடுகிறவர்கள் பிரிட்டிஷ் துருப்புகள் இந்நாட்டில் இருந்து வருவதை அனுமதிக்கலாமா? ஆதரிக்கலாமா? என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்நிலைமை ஏற்பட்டது பிரிட்டிஷாருக்கு எவ்வளவு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டதென்பதையும் அவர்களது பிடி இந்நாட்டில் எவ்வளவு தூரம் இறுகிவிட்டதென்பதையும் சிந்தித்து பார்க்கவேண்டும்.

இவ்வுபகண்டம் ஏறக்குறைய ஐரோப்பாக் கண்டத்தை ஒத்ததென்றும், ஐரோப்பாவிலிருப்பது போல் இங்கும் பற்பல இன மக்கள் வாழ்கிறார்கள் என்றும், இந்தியாவில் ஒரே ஆட்சியை நிறுவுவது முடியாத காரியமென்றும் பிரிட்டிஷ் சர்க்காரின் பொறுப்பான பதவிகள் வகித்து வந்தவர்கள் கூறியதுமட்டுமல்ல, இந்நாட்டில் வாழும் பற்பல இனமக்களின் கலை, மொழி, நாகரிகம் பழக்க வழக்கம் முதலியவைகளை நன்கு ஆராய்ந்து பார்பவர்களுக்கும் விளங்கும் இவ்வுபகண்டத்தில் ஒரே ஆட்சி நிறுவ முடியுமா என்பது.

அதுமட்டுமல்ல, இவ்வுபகண்டத்தின் வரலாற்றுச் சுவடியைப் புரட்டிப் பார்த்தாலே விளங்கும், இஸ்லாமியர்களும் இந்துக்களும் திராவிட மக்களும் தனித்தனி ஆட்சிகளை நடத்தி வந்திருக்கிறார்கள் என்பது. மேலும் பிரிட்டிஷ் ஆட்சி தோன்றிய பிறகு தான், அவர்களுடைய ஆளும் சௌகரியத்தை முன்னிட்டு, ஒரு மத்திய சர்க்காரை ஏற்படுத்தி, அதன் நிர்வாகத்தின் கீழ் மாகாண சர்க்கார்களை கொண்டு வந்தார்கள் என்பதும் விளங்கும்.

இவ்வாறு பிரிட்டிஷ் சர்க்காரினால் தோற்றுவிக்கப் பட்ட ஒரு அமைப்பு முறைதான் நிரந்தரமானதென்று அதற்காக கோடிக் கணக்கான மக்களை பலியிடுவது ஒருநாளும் அழகாகாது, அறிவுடைமையுமாகாது. எனவேதான் ஜனாப் ஜின்னா அவர்கள் கூறுகிறார் இந்நாட்டை இரத்தக் களரியிலிருந்து காப்பதற்கு வழி பாகிஸ்தான் ஒன்றுதான் என்று. ஒருவரை ஒருவர் சந்தேகித்துக் கொண்டும் பகைத்துக் கொண்டும் ஒன்றுபட்டு வாழ்ந்தால் தான் எத்தனை நாளைக்குத் தான் வாழ முடியும்?

ஜனாப் ஜின்னா அவர்கள், இப்பொழுதும் தயார் புதிதாக பேச்சு வார்த்தை துவங்குவதற்கு என்று கூறுகிறார். வங்கப் பிரதமர் சுஹ்ரவர்த்தியும் சமரசத்திற்கு இதுதான் தக்க தருணம்என்று எடுத்துக் காட்டுகிறார். நாட்டின் இன்றைய நிலையைக் கவனித்து வருபவர் எவரும் இது ஒரு நல்ல அறிகுறி என்றே கருதுவர். ஆனால் இதே சமயத்தில், நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபடுவதாகவும் கூறிக் கொண்டு வருபவர்கள் நடந்து கொள்ளும் போக்கும் செய்யும் காரியங்களும் நமக்கு பெரிதும் அச்சத்தையே விளைவிக்கக்கூடியதாக யிருக்கிறது. பிரித்தாளும் கொள்கையை இவர்கள் இன்னும் விட்டபாடில்லை. முஸ்லிம்களின் கட்டுப்பாட்டையும் உறுதியையும் குலைக்க, முஸ்லிம்களுக்கு சர்க்கார் உத்தியோகங்களில் 25 சத விகிதத்திற்குமேல் உத்தியோகங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்றும், ஷெடியூல்டு வகுப்பாருக்கும் அவர்களது விகிதாச்சாரத்திற்குமேல் உத்தியோகங்கள் வழங்க வேண்டுமென்றும் காங்கிரஸ் மத்திய சர்க்கார் உத்திரவுகள் பிறப்பித்திருக்கின்றனர் தங்களை எதிர்க்கிற முஸ்லிம் மக்களையும் ஷெடியூல்டு வகுப்பாரையும் பிரித்துவைக்க செய்யப்படும் காரியமா அல்லவா இது என்பதைநிதானமாக யோசித்து பார்த்தால் விளங்கும். மற்றும் தற்காப்புக்காக ஆங்காங்கு படைகளைத் திரட்டுவதும், இந்தோனேஷியப் படையைச் சேர்ந்தவர்களை அங்காங்கு நிரப்பிவருவதும் எதைக்காட்டுகின்றன? இது போலவே முஸ்லிம் லீக்கும் தொண்டர் படைகளை திரட்டி வருகிறது. இம் மாதிரியே இரு தரப்பினரும் முஸ்தீப்புகள் செய்துகொண்டே போனால் சமரசம் ஏற்படுவது தான் எங்ஙனம் என்று கேட்கிறோம்.

கடந்த மகாயுத்தம் துவங்குவதற்கு முன் ஹிட்லரும் நேச நாடுகளும், ஒரு புறத்தில் ஒருவருக்கொருவர் யுத்தத்திற்கான முஸ்தீப்புகளைச் செய்துகொண்டும் மறுபுறத்தில் சமாதானப் பேச்சுக்கள் நடத்தி வந்ததற்கும், இன்று இவ்வுபகண்டத்தில் நடக்கும் காரியங்களுக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது என்பது நமக்கும் விளங்கவில்லை.

ஆரியவர்க்கம் தான் உயர்ந்தது மற்ற வர்க்கத்தினர் தாழ்ந்தவர்கள் என்ற ஆணவத்தினால் ஹிட்லர் பல இலட்ச மக்கள் உயிரைக் கவர்ந்தான், அதுபோல், இந்நாட்டிலும் சிலர் தாங்கள்தான் உயர்ந்தவர்கள் மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற பாழான எண்ணங் கொள்ளாமல், நாட்டை பேராபத்திலிருந்து காக்க முன்வர வேண்டும். இதற்கு இன்றுள்ள வழி, பிரிந்து வாழ அனுமதி யளிப்பதொன்றே யாகும் இல்லையேல், எரிமலை என்றும் எரிந்து கொண்டேயிருக்கும்.

---

## பைத்தியக்காரன் (?)

(உலகன்)

பைத்தியக்காரன்! ஆமாம் அவன் பைத்தியக்காரன்தான் எடுத்ததற்கெல்லாம் பழங்காலச் சாத்திரங்களிலும் மூடப் பழக்க வழக்கங்களிலும் மூழ்கிக்கிடக்கும் சமூகம், பால்ய விதவைகளைப் பாழ்படுத்தும் சமூகம். இளம் பெண்களை முதியோர் மணந்து வாழாவெட்டிகளாக்கிப் பெண் இனத்தையே அந்தகாலத்தில் ஆழ்த்திவைக்கும் சமூகம். இக்கொடுமைகளை நீக்கப்பாடுபடுவதே லட்சியமாகக்கொண்டு வாழ்வெல்லாம் தியாகம் செய்து எண்ணம் ஈடேறாமல் தோல்வியுற்றுச் சித்தப் பிரமை கொண்ட[illegible] பகுத்தறிவில்லாச் சமூகத்தின் கண்ணுக்குப் பைத்தியக்காரன்தான்.

நளினா சேகரின் தங்கை, திருமணம் நடந்த சில நாட்களுக்கெல்லாம் விதவையாகி விடுகிறாள். தங்கைக்கு மறுமணம் செய்யாமல்தான் திருமணம் செய்துகொள்ளச் சேகர் மறுக்கிறான். கவலையால் அவர்கள் தாயார் இறக்கிறாள். தந்தை கிழ ஆறுமுகம் காந்தா என்னும் படித்த ஒரு இளம் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்கிறான். தன் பெண்ணுக்கு மட்டும் 'தலைவிதி அவ்வளவுதான்' என்று பிடிவாதமாக இருக்கிறான். காந்தாவுக்குப் பெயரளவில் தான் கலியாணம். நளினாவும், காந்தாவும் கன்னிப் பெண்கள். காந்தா ஆறுமுகத்தைத் தனக்கு தாலி கட்டின தகப்பனார் என்றே மதிக்கிறாள். ஒரு நாள் பொருந்தாத் திருமணத்தின் விளைவுகளை ஆறுமுகத்திடம் பலபடப் பேசுகிறாள். ஆறுமுகத்துக்கு அறிவு உதயமாகிறது. காந்தா விடுதலையாகித் தன் பழைய நண்பன் மூர்த்தியுடன் வாழ்க்கை நடத்துகிறாள். நளினாவைச் சோமு என்னும் பால்ய நண்பன் கலியாணம் செய்துகொள்வதாக ஆசை காட்டி அவளைக் கெடுத்து விடுகிறான். நளினா அவமானத்தால் இந்தப் பயங்கர சமூகத்தில் வாழ விருப்பமில்லாமல் தற்கொலை செய்து கொள்ளுகிறாள். ஒன்றுமே புரியவில்லை சேகருக்கு. ஆத்திரத்தில் சோமுவைக் கத்தியால் குத்திக் கொல்கிறான். பால்ய விதைவைகளின் கதி அவனைக் கலக்குகிறது. அவன் சித்தப்பிரமை கொண்டு பைத்தியக்காரனைப் போல் எதிரில் வரும் சிறுமியரைப் "பெண்களே, நீங்கள் எல்லாம் கல்யாணம் செய்துகொள்ளாதீர்கள்,

அப்புறம் நீங்கள் விதவைகளாகி விடுவீர்கள். பிறகு பொட்டு வைத்துக் கொள்ள முடியாது" என்று கதறுகிறான். பாழாய்ப் போன சமூகத்துக்கு அவன் ஒரு பைத்தியக்காரன்தான்.

இந்த நாடகச் சித்திரம் இப்போது சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் நடப்பது. என். எஸ். கே. நாடக சபையினரின் தயாரிப்பு. கதை வசனம் தோழர்கள் சகஸ்ரநாமம், ப. நீலகண்டன் இவர்களால் மிகவும் கச்சிதமாகவும் சாதாரணமான பேச்சு நடையிலும் அழகாக அமைந்திருக்கிறது.

சேகராக நடிக்கும் சகஸ்ரநாமம் பாத்திரத்துக்குத் தகுந்த உயிர் நடிகர். நல்ல தோற்றமும் இயற்கையான நடிப்பும், கனீரென்று பேசும் குரலும் அவர் ஒரு முதல் தரமான நடிகர் என்பதைக் காட்டுகின்றன. பைத்தியக்காரனாக நடிக்கும் ஒவ்வொரு காட்சியும் உடல் சிலிர்க்கும்படி செய்கின்றது.

நளினுவாக நடிக்கும் எஸ். கே. காந்தா பால்ய விதவைகள் படும் கஷ்டங்களைக் காட்டும் கட்டங்களில் மிகவும் உருக்கமாக நடிக்கிறார். காந்தாவாக நடிக்கும் டி. எம். கமலா மிகவும் விறு விறுப்பாகவே நடிக்கிறார். கிழப் புருஷனிடம் பொருந்தா மணத்தின் விளைவுகளை பல படப் பேசி காந்தா விடுதலை பெறும் காட்சி மக்கள் மனத்தைக் கவர்கிறது.

எடுத்ததற்கெல்லாம், என்பரந்த அனுபவத்திலே என்று சொல்லி நடிக்கும் தரகன், வேலைக்காரன் 'சனி' (சத்தியமங்கலம் கித்தியாநந்தம்) பால்காரச் சிறுமி இவ் வேடங்களில் வரும் மூவரும் நகைச் சுவைக்கு நல்ல பாத்திரங்கள். ...க்கத் தயாராய் இல்லாதவர்களுக்கு இவர்களின் இயற்கையான விகட நடிப்பு ஆபத்தைத்தான் கொடுக்கும்.

'சின் ஜோடனைகள் மின்சார விளக்கு ஏற்பாடுகள் முதலியவை மிகவும் அபாரமான அம்சங்கள். வாழ்க்கையை நேரில் சித்தரித்துக் காட்டும் புதிய செட்டிங்குகள் சினிமாக் காட்சி போல் இருக்கின்றன. ஓவியர் மாதவன் நம் பாராட்டுதலுக்கு உரியவர்.

பொதுவாக இந்நாடகத்தில் பாடல்கள் அவ்வளவாக ரசிக்கவில்லை. 'வாழ்வை இழந்தேன் நான்' என்று விதவைப் பாடல் ஒன்று தவிர மற்றப் பாடல் எல்லாம் இல்லாமல் இருந்தாலே போதும் போல் இருக்கிறது. நடிகர்கள் இரவல் தொண்டையில் பாடுவதுபோல் காணப்படுவது அவ்வளவு பொருத்தமாக இல்லை. மூர்த்தியாக நடிப்பவர் இன்னும் சிறிது உணர்ச்சியுடன் நடிக்க வேண்டும்.

சேகருக்குத் தன் தந்தையின் மூடப் பிடிவாதத்தாலும் தங்கையின் கோர முடிவாலும் ஏற்பட்ட வாழ்க்கையில் வெறுப்பையே (Tragedy) நோக்கமாகக் கொண்ட இந்நாடகத்தில் கடைசி காட்சியில் பால்காரச் சிறுமியும் வேலைக்காரச் சனியனும் மங்களகரமாகக் குடும்பம் நடத்துவதும் 'சுபம்' கட்டத்தில் அலங்கார விளக்குகளுடன் 'தொப்' பென்று காந்தியார் படம் கீழே இறங்குவதும் எதற்காக என்பது புரியவில்லை. துக்ககரமான முடிவுக் காட்சியுடன் நாடகத்தை நிறுத்திக்கொண்டால் மக்கள் மனத்தில் நல்ல உணர்ச்சி பாவிப் பலன் கொடுக்கும் என்பதை என். எஸ். கே. நாடக சபையாருக்குக் கூற விரும்புகிறோம்.

குறிப்பு:— "பைத்தியக்காரன்" என்னும் நாடகத்தைப் பற்றி தோழர் உலகனர் எழுதிய விமர்சனம், நன்கு தீட்டப்பட்டிருக்கிறது. இத்தகைய சீர்திருத்த நாடகங்கள்தான் எங்கும் நடிக்கப்படவேண்டும் என்பது நமது அவா. இந் நாடகத்தில் நாட்டில் நடக்கும் உண்மையான சம்பவங்களை அப்படியே எடுத்துக் காட்டப் பட்டிருக்கிறது. இந்தக் காரியம் வரவேற்கக்கூடியதுதான். ஆனால் இது மட்டும் போதாது. நாடகம் நடிப்பதின் நோக்கம் இதுதானா?

இத்தகைய காட்சிகளை மக்கள் நாடோறும் கண்டும் கேட்டும் வருகிறார்கள். ஒழிக்கப்படுவதைத்தான் காண முடிவதில்லை. இத்தகைய கொடுமைகளை அதாவது விதவைகளின் துயரை நீக்குவதற்கு மக்களுக்குத்துணிவு பிறப்பதில்லை. எனவே, இக்கொடுமைகளை விளக்குபவரின் நோக்கம் இவைகளை ஒழிப்பதற்கு என்ன வழி என்பதை எடுத்துக் காட்டுவதாகவும் இருக்க வேண்டும். இதற்கு வழி, விதவைகளை மறு மணம் செய்துகொள்ள ஆண் மக்கள் முன்வரவேண்டும். இதற்குத் துணிவும் ஆற்றலும் வேண்டும், சமுதாயத்தின் தாக்குதலையும் தாற்றலையும் இலட்சியம் பண்ணாமல் முன்வரவேண்டும். அவ்வாறு துணிவு பிறக்குமாறு வாலிபர்கள் முன்வரத் தூண்டக்கூடிய முறையில் கதையின் அமைப்பு இருக்கவேண்டும். அப்பொழுது தான் இக்கொடுமைகள் ஒழிக்க, இத்தகைய நாடகங்கள் உதவியாக இருக்க முடியும்.

மற்றும், இக்கதையில் சேகரை பைத்தியக்காரராக்கப்பட் டிருப்பதும் அவ்வளவு பாராட்டக்கூடியதாயில்லை. நாட்டில் உள்ள கொடுமைகளைக் காணும் ஒருவனுக்கு பைத்தியம் பிடிப்பதென்றால், அவனை வீரனென்று எவ்வாறு கொள்ள முடியும்? கோழை என்று தானே கொள்ள முடியும்? வீரனாக இருந்தால் சேகர் விதவைக் கொடுமையை நீக்க நாடு நகரமெங்கும் விதவை மறுமணக் கழகங்கள் நிறுவி, விதவைகளை மறுமணம் செய்யுமாறு மக்களைத் தூண்டும் பணியிலல்லவோ இறங்கியிருக்கவேண்டும். தானும் ஒரு விதவையை மறுமணம் செய்து கொள்வதாக குளுரைத்திருக்க வேண்டும் அன்றோ. தற்கொலை செய்து கொண்ட தன் தங்கையின் பிணத்தை கீழே கிடத்தி, விதவையின் துயரை விளக்கும் ஒரு சொற்பொழிவை நிகழ்த்துவதாக செய்திருந்தால் மக்கள் மனத்தில் அது எத்தகைய உணர்ச்சியை யூட்டும் என்பதையும் கவனிக்க வேண்டும். ஆகவே, இனியாவது இதுபோன்ற சீர்திருத்தக் கதைகள் எழுதுபவர்கள் படிப்பினையுடையதாக இருக்குமாறு பார்த்துக் கொண்டால் இலட்சியம் நிறைவேறுவதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்.

பெண்களை யடிமை யென்றே
பேசு மிந்த நாட்டிலே,
எண்ணிடும் உரிமை யார்க்க
இன்ப வாழ்வு தோன்றுமோ?

# சிந்தனை செய்!

(தேவி தாசன்)

தொழில்வாரியாகவும், கலைவாரியாகவும், மொழிவாரியாகவும், இன்னும் எத்தனையோ கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டும், உலகனைத்தும் பலஸ்தாபனங்கள் நிறுவி உணர்ச்சியுடன் எழுந்துநிற்கும் காலம் இது சரண்டப்படுபவன்-சுரண்டுபவனை உணர்ந்து அவன் வலைக்கு அகப்படாமல் அவனை மண்ணோடு மண்ணாக்க முயன்று போராடும் காலம்என்பதை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்த இக்காலத்திலே அஸ்திவாரமெனப்படும் இனவெழுச்சி பகுத்தறிவுடன் ஒவ்வொரு மக்களின் உள்ளத்திலும், எண்ணத்திலும் கள்ளத்தனமின்றி துலங்க வேண்டும். அவ்விதம் துலங்கும் உணர்ச்சியே, தீண்டாமையை ஒழிக்கும். எந்த ஏகாதிபத்தியத்தையும் அழிக்கும். சகோதர வாஞ்சையைக் கூட்டும். தலை விரித்தாடும் மூடப்பழக்க வழக்கங்களை ஓட்டும். அன்பைக் காட்டும், அச்சத்தை அகற்றும், உண்மையின் பொருட்டு உயிரை துச்சமெனக் கருதும், சக்தி பிறக்கும்.

சுரண்டப்படுகிறோம் என்பதை உணர்ந்த தமிழ்நாடு மாதர்களை அடிமைக் குள்ளாக்கி மகிழிழந்தோம், படைத்தநிதி இழந்தோம். ஆதலால்.

மாதரின் சங்கங்கள் எங்கும்—ஓங்கி. வாழ்ந்து சிறந்திட உண்மைகள் தங்கும்

என்ற தத்துவத்தைக்கண்டு புத்துணர் வூட்ட முனைந்து நிற்கும் வாலிப உள்ளம் படைத்த தமிழ் நாடு. இன்னும் வாழ்க்கைக்கு முட்டுக்கட்டை போடும் மூடப்பழக்க வழக்கத்தை ஒழித்துக்கட்ட மார்பை தட்டி-செய்கையில் எடுத்துக்காட்டி விழிப்புற்று வரும் பொன்னாட்டிடையே, ஆதவன் செங்கதிரைப் பரப்பி உலகனைத்தும் பரவசப் படுத்தும் காலை எழில் போன்று. உதயம் மலர்ந்தது. தமிழ் நாடெங்கும் வெற்றி முரசு கொட்டி மங்களைத் தட்டி எழுப்பி, ஊக்க மூட்டி, ஆக்கப் பணி புரிய எழுந்து முன் நிற்கும் இத்தருணம் தமது குறைகளை போக்க தமிழ் மக்கள் அனைவோரும் முன்வர வேண்டும்.

தமிழகத்திற்காகப் பாடுபடும் பத்திரிகையோ மிகச்சில, எத்தனையோ தோன்றின. அவைகள் சூழ்ச்சி இனங்களாலும் நம்மவரின் உணர்ச்சிக் குறைவாலும் மறைந்தன என்பதை சொல்லக்கூடா கூசுகிறது. எ தமிழா உன் பண்டைய வீரம் இதுவா? புறமுதுகில் புண்பட்டு மகன் இறந்திருந்தால், தனத்தை அறுத்தெறிவேன் என்று உருவிய வாளேந்தி போர்க்களம் நாடிச்சென்ற வீரத்தாய்மார்கள்பிறந்து வாழ்ந்த நாடென்பதை மறந்தனையா? சிந்தித்துப்பார். நாட்டின் முதுகெலும்பாகிய தொழிலாளர்களுடையவும், பொது மக்களுடையவும், உரிமைக்காக போராட வேண்டுமானால், மக்களிடையே பகுத்தறிவு ஒளிரவேண்டுமானால், உலகின் போக்கை-ஒவ்வொருவரும் தெள்ளத்தெளிய உணரவேண்டுமானால், நமக்கும் பத்திரிகைப் பலம், வேண்டும், என்பதை ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து நிற்கும் காலம் இது. ஆதலால்.

"இன்பத்தமிழ் அணிகள் அணிவாய் எல்லாம் இனியமொழியிலு மணியாய்'

# "அணுக்குண்டு"

(எமனார்)

பிள்ளை பிடிப்பவர்கள் சம்பந்தமாக விண் புரளி — தலைப்புச் செய்தி

பிள்ளை கொடுப்பவர்கள் சம்பந்தமாக ஒன்றும் கேட்பார் காணோம்!

★ ★ ★

நாற்பது கோடி ஜனத்தொகை கொண்ட தேசம்—ஒரே சுதந்திர அரசாங்கத்தின் கீழ் உலகத்திலே வேறு எந்தப் பகுதியிலும் தற்சமயம் இல்லை இந்தியாவிலே தான் முதன் முதலாக அத்தகைய அதிசய ஆட்சி ஏற்படுகிறது. — கல்கி

உண்மைதான்! இழந்த வாலிபத்தை 24-மணி நேரத்தில் பெறுவது 8-வது உலக அதிசயம்! மோதிலால் திருமகன் பரிபூர்ண சுதந்திர தீர்மான கர்த்தா, வெள்ளையனே வெளியேபோ என்று வீரமுழக்க மிட்ட தலைவர் "ஜவஹர்" பிரிட்டிஷ் மன்னர் பிரானுக்கு ராஜ பக்தியோடு நடந்து கொள்வேன் என்று ராஜவிஸ்வாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டது உலகத்தின் 9-வது அதிசயம்தான்!

கட்டாயப்படுத்தி கதரை உற்பத்தி செய்து உடுத்தச் சொல்வது அடிமைத் தனத்தின் அடையாளந்தான். — காந்தி

கவி ரவீந்திரர் இதைப் பல வருடங்களுக்கு முன்னரே "சிறு பிள்ளைத்தனமானது" என்று சொல்லி விட்டார். ஐயோ! எங்கள் பிரதமர் பிரகாசத்திற்கு 3 கோடி ரூபாயை பொதுப் பணத்தினின்றும் செலவழித்து „கதர் திட்டம்" தயாரித்து இருக்கிறாரே! இதை கடவுள் இருக்கிற கோயிலில் சொல்லித்தான் முட்டிக்கொள்ள வேண்டும்!

★ ★ ★

எந்த விதமான பாகிஸ்தானத்தையும் முட்டாள் தனமான பலாத்காரத்தை உபயோகிப்பதன் மூலம் பெற்றுவிட முடியாது — தமிழ் ஹரிஜன்

எந்த விதமான "ராமராஜ்யத்தையும்" ராம்துன் பஜனையாலும் முட்டாள்தனமான பிரச்சாரத்தாலும் கட்டாயம் பெற முடியாது பாபுஜீ!

★ ★ ★

வளம் பெற்ற இந்நாட்டில் இன்று கண்முன் காணும் காட்சி என்ன? இமயம் முதல் குமரிவரை ஒரே பாலைவன நிலைமையைத் தான் காண முடிகிறது. — ஆனந்த விகடன்

மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஆரியர்கள் சும்மா இருந்தால்தானே!

★ ★ ★

திருத்தணியில் பதவி ஏற்பு தினமாகிய இன்று காலை 11-மணிக்கு கோவில் அர்ச்சகர்கள் யாவரும் கூடி இருந்து ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமிக்கு பண்டித ஜவஹரின் பெயரால் ஸகஸ்ர நாம அர்ச்சனையும் விசேஷ "நெய் வேத்திய" தீபாராதனைகளும் செய்தனர். — தினமணிச் செய்தி

அடி சக்கை! நம் அப்பர் அம்மங்கார் கார்பாடு ஜோர்தான்! தக்ஷிணை கொடுத்த அர்ச்சனையா அல்லது ஓ. சி. யா?

---

என்ற உண்மையைக் கடைப் பிடித்து நமது திராவிடப் பத்திரிகைகளை ஆதரிப்பதோடு பெருக்கவும் முயற்சி எடுப்பது தமிழனின், கடமையாகும்.

# "மணிவாசகங்கள்"

திருவத்திபுரம்
மா. நா. ராசமாணிக்கம்

"இன்று சென்னை மந்திரிகள் நடந்துகொள்வதைப் பார்த்தால் அவர்கள் பதவிக்கு ஆசைப்பட்டே காரியங்களைச் செய்வதாகவே தெரிகிறது. உறுதியுடனும் சுறுசுறுப்பாயும் மந்திரிகள் இதுவரையில் எதுவுமே செய்யவில்லை."

"சென்னைமந்திரிகளோ ஆமை வேகம் நத்தை வேகத்தில் காரியங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். பெரிய அவசரமான காரியங்களைக் கூட மந்திரிகள் ஒத்திப்போடுகிறார்கள். 24 மணி நேரத்தில் முடிக்கக்கூடிய ஒரு காரியத்தை மந்திரிகள் 3 மாதங்களுக்கு ஒத்திப் போடுகிறார்கள் என்றால் மந்திரிகளின் வேகத்திக்கு வேறு உதாரணம் வேண்டியதே இல்லை."

"சுய நலம் காங்கிரஸ் மந்திரிகளிடம் நிறைய இருக்கிறது. இனப்பற்று அவர்களுக்கே சொந்தம். இனம் என்று வந்து விட்டால் மந்திரிகள் கூட "மைலாப்பூர் முல்லாக்களுக்கு" முதுகு காட்டுகிறார்கள்."

"திறமையைப் பற்றி வேதாந்தம் பேசும் மந்திரிகள், குயின் மேரிஸ் கலா சாலை பிரின்ஸிபால் வேலை சம்பந்தமாக ஏன் அத்திறமையை மறந்து இனப்பற்றுக்கு இடம் கொடுத்தார்கள்? திறமையைப்பற்றிப் பேசும் கல்வி மந்திரி இந்த ஒரு விஷயத்தில் ஏன் மூளையைப் பறிகொடுத்தார்?"

"மற்ற மாணவர்கள் பார்ப்பன மாணவர்களைவிடப் புத்திசாலியாக இருந்தாலும் பார்ப்பன ஆசிரியர்களும், மற்றும் பரிட்சைப் பேப்பர்களைத் திருத்தும் ஆசிரியர்களும் பார்ப்பன மாணவர்களுக்கு அதிக சலுகை காட்டுகிறார்கள்."

"இப்பேர்ப்பட்ட இனப்பற்று கொண்ட மந்திரிகள், அவர்கள் யாராக இருந்தாலும் சரி அவர்கள் பதவிகளில் இருப்பதைவிட இல்லாமலிருப்பதே மேல். இனப்பற்றுக் கொண்டவர்கள் இருப்பார்களேயானால் அவர்கள் உடனே பதவியிலிருந்து வெளியேறி விடுவதுதான் நல்லது. அதுதான் புத்தி! இன்றேல் அவர்களைப் பதவிகளிலிருந்து வெளியேற்றப் பொது மக்கள் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்."

படித்தீர்களா மேலே இருப்பவைகளை! இவை வினைகளை விற்க வந்திருக்கும் "விடுதலை"யின் விளக்க மல்ல. தனி நாடு அமைத்தே தீருவோம் என்று முழங்கிவரும் "திராவிட நாடு" தீட்டியதல்ல. தான் கண்டதைக் குன்றின் மேல் ஏறிக்கூறத் துணிவுள்ள "குடி அரசின்" கூற்றுமல்ல. தோன்றியதைத் துணிவுடன் சொல்லும் "தொழிலாளர் மித்திரனின்" தொடுப்பு மொழி அல்ல, அவை.

ஆனால், அவை, காங்கிரஸ் குட்டையிலேயே ஊறின, தேசியத்திலே புரண்ட "தமிழ் மணி"யின் அருமையான "மணிவாசகங்கள்." சென்ற 1—9—46 இதழிலே "டம் டம் குண்டு" என்ற தலைப்பிலே தீட்டியவை.

இதையே தான் எங்கள் பெரியார் என்றையதினம் காங்கிரஸை விட்டு விலகினாரோ அன்று முதல் கூறிக்கொண்டு இருக்கிறார். அதற்காக அவரை "தேசத்துரோகி," "நாஸ்திகன்," 'வெள்ளைக்காரன் அடிமை" என்றெல்லாம் தேசியத் திரு ஏடுகள் மனம் போன போக்குபடி எழுதித் தீர்த்துக்கொண்டன. நம் "நாகல் நடை அழகர்" தமிழ் மணியாரோ, இவை எல்லாவற்றையும் தாண்டி, "பெரியார் இராமசாமி எழுதின காகிதம் எல்லாவற்றையும் வைத்திருந்தால், அவர் இறந்த பின் அவரை கொளுத்தவாவது உபயோகப்படும்" என்று கூட எழுதத்துணிந்தார்.

நுனி மரத்தில் இருந்து கொண்டு இப்பொழுது அடிமரத்தையே வெட்டுகிறாரே, இவர் கூற்றை என்ன என்று சொல்வது! எப்படி இருக்கிறது யோக்யதை!!

தேசிய வாதிகளும், தியாகிகளும் "தமிழ் மணியை"ப் படித்து விட்டு என்ன செய்கின்றனர்? தங்கள் சிந்தனைக்கு வேலை கொடுக்கின்றனரா அல்லது "மலையைப் பார்த்து........" என்று விட்டு விடப் போகிறார்களா?

நம் "விபீஷணாழ்வார்களு"க்கு (திராவிட காங்கிரஸ் தோழர்கள்) இப்பொழுதேனும் புத்தி தோன்றுமா? இனத் துரோமகாவது புரியாமல் நாம் செல்லும் வழியில் ஒரு தடைக் கல்லாக இல்லாமலாவது இருப்பார்களா? ஏதோ பார்ப்போம்!

---

## எத்தனை நாள்?

(கலை தகர்வோன்)

மக்களின் விருப்பம் அறிந்து மக்கள் வேண்டுதலை ஆராய்ந்து முடிவுசெய்து நிறைவேற்றுவதே உலக ஜன நாயக முறையின் அடிப்படை!

இந்த அடிப்படையைத் தகர்த்தெறியும் "கோணல் முறை" ஒன்று உண்டென்றால் அது "நமது சென்னை மந்திரி சபை"க்கே உரியது என்று சொல்லாமலிருப்பதற்கில்லை.

பன்முறை வேண்டினோம் நம் அரும் கலைஞர்கள் கிருஷ்ணன்-பாகவதர் விடுதலை கோரி! வேண்டினோம்! கலங்கினோம்! என்றும் நடவாத சர்வகட்சி மாநாட்டிலும் கதறினோம்!

"திராவிட நாடு" இதழ் ஒவ்வொன்றிலும் தமிழகத்தினர் உள்ளக் கிடக்கைக் கதறல் வெளியிடப் பட்டது.

"எல்லாம் வீண்" என்று சொல்லுகிறது மந்திரிசபை. "முதலில் அரசியல் கைதிகள்" என்றார் பிரதமர்! "பார்ப்போம்" என்றார் பாஷ்யம் அய்யங்கார்! "ஸ்திரமான முடிவு பிறகு!" என்றார் ஸ்தலஸ்தாபன மந்திரி!

"பார்த்தல்", "ஸ்திர முடிவு" எதுவும் இன்று வரை இல்லை! "கலைஞர் பற்றிக் கவலைப்பட இது நேரமில்லை" என்கிறது மந்திரிசபை!

"கலைஞர் விடுதலை பற்றி என் சிந்திக்கவில்லை?" என்று கேட்கிறது தமிழகம்!

எத்தனை நாள் சொல்லிலே மயக்கம் அடைவர் மக்கள்?

---

# "இதை அறியாயோ!"

[வந்தவாசி K. M. A. வஹாப்]

தோழர்களே! இன்று உயர் சாதி என்று கூறிக்கொள்ளும் ஓர் வஞ்சகக் கூட்டத்தால் இன்று சூத்திரர் என்று ஒரு மாபெரும் சமுதாயத்தை ஒரு புறமாக தள்ளப்பட்டு வருவதை யாவரும் அறிந்ததே. இது மட்டுமல்ல, நிலத்தை தவிடு பொடியாக்கி வரும் பாட்டாளி மக்களை நான்கு பிரிவு போராது என்றோ என்னவோ ஐந்தாம் பிரிவாகவும் பிரித்து ஆதிதிராவிடர்கள், ஹரிஜன் என்ற திருநாமமிட்டு ஊரின் ஓர் ஒதுக்கப் பட்டுள்ள மூலையில் தள்ளப்பட்டுக்கிடக்கிறார்கள். அநியாயம்! இதனைக் கேட்க ஒரு பொது நல்த்தோழனும் இல்லையா!

சீரும், சிறப்பும், புகழும், கீர்த்தியும் பெற்று வாழ்ந்த சமூகம் இன்று உயர்ந்தோர் என்று சொல்லிக் கொள்ளும் உதாரி கும்பல்களால் ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, ஒடுங்கி, மெலிந்து, வாடி, சிதறுண்டு கிடக்கும் உன் மக்களை அறியாயோ!

அல்லும் பகலும் உழைத்து உழைத்து ஐயோ! என்று அரை வயிற்றுக் கஞ்சிக்கில்லாமல் அலைந்து திரியும் அனியாயக் கொடுமையை அறியாயோ! வெண்மையான மேனியை வெய்யிலென்றும், மழை யென்றும் பனி யென்றும் முள்ளென்றும், கல்லென்றும் பாராமல், பகலெல்லாம் உழைத்து, இரவெல்லாம் தூக்க மில்லாமல் சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் எலும்புந் தோலுமாக இருக்கும் உன் சமூகத்தை அறியாயோ!

வெற்றி வேர்வை நிலத்தில் விழ, நவதானியங்களை பயிர் செய்து நீதியற்றவர்களுக்குக் கொடுத்து விட்டு, நீ கூழுக்கும் உப்பில்லாமல் கூத்தாடும் உன் சமூகத்தை அறியாயோ!

அன்னியர்களுக்கு அரண்மனைப் போன்ற கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்துவிட்டு, குளிரைத் தாங்கமுடியாத குடிசைகள் கட்டி, மழையைத் தாங்க முடியாத மண் சுவர்களைக் கட்டி, வேதனைத் தாள முடியாத வீடுகளைக் கட்டி வேதனைப்படும் உன் சமூகத்தை அறியாயோ!

பெயரிலுங் கூட கன்னியப்பனை கன்னி என்றும் குருசாமியை குருவன் என்றும், அறைகுறையாய் அவமானப் படுத்தி அழைக்கும் அக்கிரமத்தை அறியாயோ!

ஐந்து வயது முதல் ஐம்பது வயது வரைக்கும் மானிட வர்க்கத்திற்காக மழை என்றும், வெப்பமென்றும் கருதாது அரும்பாடுபட்டு இவ்வகண்ட உபகண்டத்தை வாழ வைக்கும் ஓர் உத்தம குலத்தை, தொட்டால் தீட்டு தீண்டப்படாதவன், பஞ்சமன், பறையன், சண்டாளன், தரித்திரன் என்றெல்லாம் பலபலப் புதிய பெயர்களை வைத்து மக்களைப் பதறடிக்கும் துயர் அறியாயோ!

ஜாதி இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளும் சண்டாளக் கூட்டத்தார் நம்மைத்தீண்டாமை எனும் நியவலையில் சிக்கவைத்து என்றும் மீளா நரக வேதனையில் ஆழ்த்தியிருப்பதை அறியாயோ! ஆகவே, தீண்டாமை என்னும் தீயை சமத்துவம் எனும் நீரை ஊற்றி அணைக்காவிடில் தீ அணையாது.

தாழ்த்தப்பட்ட வாலிபர்களே! எதிர்காலம் உங்கள் கையில்தான் சிக்குண்டுக் கிடக்கிறது. நாங்கள் யாருக்கும் அடிமைகளல்ல; இனி உங்கள் ஏமாற்று வித்தைகள் எங்களிடம் பலிக்காது எனக் கர்ஜியுங்கள். உங்கள் சமூகக் கொடியின் கீழ் ஒன்று சேருங்கள். குணத்திலும், இனத்திலும், அறிவிலும், ஜாதி பேதத்திலும் வித்தியாசமில்லை. இனி ஆண்டே என்று யாரையும் அடிவணங்க மாட்டோம் என்று இன்றே சபதம் செய்யுங்கள்!

---

"உன் சொந்தவாழ்வைத் தேடாதே. ஏனெனில் அதுவே மரணம்.

ஆனால், உன் வாழ்வை உவந்தளிக்கும் மார்க்கம் எது வென்று தேடு— அப்படிச் செய்தால் எப்பொழுதும் அதிகாலையில் உனக்குப் புதிய உயிர் பிறக்கும்.

★ ★ ★

சமத்துவ வாழ்வைச் சாவு விழுங்கி விட முடியாது. வெள்ளத்தை விராலால் தடுக்க இயலாது. தடைகளை எல்லாம் மீறி அது ஓடவே செய்யும்."

எட்வர்டு கார்ப்பென்டர்.

# ரூஸோவின் வாழ்க்கை

சென்ற வாரத் தொடர்ச்சி

எந்த நாட்டுக்குப் போனாலும், அவர் மீது காருண்ய சர்க்கார்களின் கருணை கடாட்சம் பிறந்தே வந்தது. இக் கடாட்சத்திலிருந்து தப்புவதற்கு வழித்தேடுவதே அவரது முக்கிய வேலையும் கவலையுமாயிருந்தது. பாதிரிகளும் அரசர்களும் இவரைத் துரத்திக்கொண்டே வந்தார்கள். இதனால், இவர் ஒரே இடத்தில் நிலையாக இருக்க முடியாமல் நாடோடிகளைப்போல் வாழ்வை நடத்த வேண்டியதாயிற்று. இவ்வாறு 8 வருடங்கள் அஞ்சாதவாசம் கழித்தார்.

இந்தச் சமயத்தில், பிரஷ்ய நாட்டரசன், நமது நாட்டில் வசிக்கலாமென்று ரூஸோவுக்கு அனுமதித்தான். அப்பொழுது அந்நாட்டை ஆண்டுவந்த மன்னன் "பிரடரிக் தி கிரேட்" என்பவன். இவன் சற்று தாராள நோக்குடையவனாக விளங்கினர். ஆனாலும் ரூஸோ இம் மன்னனது தாராளத்தனத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. மன்னன் அளிக்க வந்த உதவியை நிராகரித்தார்.

"நான் மன்னர்களுக்கு மனக் கலக்கத்தைக் கொடுக்கிறவன். அவர்களுடைய ஆணவப் போக்கைக் கண்டிக்கிறவன்.

ஆகையால், உங்களுடைய உதவி எனக்குத் தேவையில்லை.

மன்னர்களிடமிருந்து ஒரு செம்பு சல்லியும் வேண்டேன்.

எனக்கு வேண்டிய பொருளை சம்பாதிக்கத் தெரியும்".

என்று ரூஸோ பிரஷ்யா மன்னனுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இது ஒன்றேபோதும். ரூஸோ தனது கொள்கையில் சுயமரியாதையில், எவ்வளவு உறுதியாயிருந்தார் என்பதை விளக்க.

கடைசியாக **மோடியர்** என்ற கிராமத்தில் சிறுகுடிசையொன்று அமைத்துக்கொண்டு தம் துணைவியோடு வாழ்க்கை நடத்தி வந்தார். அவருடைய புத்தகங்களை அச்சிட்டு வந்தவர் மாதம் ரூ.16 அனுப்பி வந்தார். அத்துடன் அவரும், அவருடைய வாழ்க்கைத் துணைவியுமாக சேர்ந்து ஜரிகை உற்பத்தி செய்து விற்று மாதம் 5 அல்லது 6 ரூபாய் சம்பாதித்து வந்தனர்.

அந்த சிறிய குடிசையிலும் எளிய வாழ்க்கை நடத்தி சுதந்திரத்துடன் வாழவிடவில்லை தம்மைப்போல் பிறரையும் நேசிக்கும் கிறிஸ்துவ குருமார்களே. நாத்திகர்கள்; ரூஸோ நாஸ்திகன் என்ற பெயரைச் சூட்டி பாமர மக்களை ரூஸோ மீது "ஏவி விட்டார்கள் பரமண்டலத்துக்கு வழிகாட்டும் பரமனது பக்தர்கள் ஆவேசகம் கிளம்பிய மக்கள் பாய்ந்தார்கள் ரூஸோ தம்பதிகள் மீது.

இதிலிருந்து உயிர் தப்பிப் பிழைத்து ஒரு தீவையடைந்தார் அங்குள்ள அரசாங்கமும், இவருக்கு 14 நாள் தவணைகொடுத்து வெளியேறும்படி கட்டளைப் பிறப்பித்தது. ரூஸோ அத் தீவையும் விட்டு வெளியேறி ஒரு குறிக்கோளும்இல்லாமல் போய்க்கொண்டிருந்தார். போகிற வழியில் பாரிஸ் நகரில் தங்கலானர்.

ரூஸோ பாரிசுக்கு வந்துவிட்டார் என்ற செய்தி மக்கட்கு எட்டிவிட்டது. அவரைப் பார்க்க மக்கள் கூட்டம் கடல் போல் கூடிவிட்டது அவர் இருந்த இடத்தில். அந்நாட்டு மன்னன் ரூஸோவுக்கு எதிராக இருந்தாலும் மந்திரிகள் மட்டும் இவர்பால் கருணையுடைவர்களாயிருந்தார்கள். இரகசியமாக இவரை வந்து கண்டுபோனர்கள். 28 நாட்கள்வரை அங்கு தங்கியிருந்தார். பின்னர் இங்கிலாந்துபோய் சேர்ந்தார்.

இங்கிலாந்தில் இவரை அறிஞர்களும் பொதுமக்களும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். ஆனல் ரூஸோவின் கருத்துக்குஎவ்வளவு நாட்களுக்குத் தான் அந்நாடும் இடந்தரும்? அதனல், அவருக்கு அங்கு எதிர்ப்பு ஏற்பட்டது. அங்கிருந்து குடிசையைத் தூக்கினர்.

பிரான்சு நாட்டில், அவருக்கு அப்பொழுது நல்ல செல்வாக்கு இருந்தது. மக்கள் இவரை நன்கு மதித்தனர். தலைவர்களும், மக்களும் இவரிடத்தில் காட்டும் அன்பையும் ஆதரவையும் கண்டு மன்னன், சற்று தயங்கினன் இவர் விஷயத்தில் தலையிட. ரூஸோவும் பாரிசிலே தங்கினர். கடைசியாக உடல் நலிவுற்று 1778 ஆண்டு ஜூலை 2ம் நாள் **எர்மினன் வில்லி** என்னும் கிராமத்தில் இயற்கை யெய்தினர். அவரது பிணத்தைப் புதைக்க கிறிஸ்துவ கோவில்கள் இடந்தர மறுத்துவிட்டன, எந்தமதத் தலைவரும் இடந்தரவில்லை. ரூஸோவின் நண்பர்கள் சேர்ந்து, ஒரு தீவில் அவரது உடலை அடக்கஞ்செய்தார்கள்.

ரூஸோ மூட்டிவிட்டத் தீ, அவருக்குப்பின் கொளுந்து விட்டெரிய ஆரம்பித்தது. மக்கள் மனத்தில் கொதிப்பை யுண்டு பண்ணிற்று. இதன் பயனக பிரான்சில் பெரும் புரட்சிதோன்றிற்று. அவர் மறைந்த 16 வருடங்களுக்குப் பின், அரசர் அழிக்கப்பட்டு, ரூஸோவின் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி நிறுவப்பட்டது. அப்போது பொது மக்களின் விருப்பத்திற்கிணங்க பீரங்கிகள்முழங்க வாத்திய கோஷங்களுடன் வெற்றி பொலியுடன் அவரது எலும்புகளை, அத்தீவினின்றும் எடுத்துக்கொண்டு வந்து பாரிஸ் நகரித்தில் பெரிய மகான்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் இடத்தில் பிரஞ்சு சர்க்கார் புதைத்தார்கள்.

ரூஸோவின் உடல் அழிந்து போய்விட்டாலும், அவருடைய கொள்கைகள் இன்னும் உயிரோடிருக்கின்றன. அவை மக்கள் மனதைவிட்டு ஒருநாளும் நீங்கா. இன்று ரூஸோ உயிருடன் இருந்தால், அவரதுகொள்கை நாடெங்கும் பரவியிருப்பதைக் கண்டு பெருமகிழ்வடைவர். அவரது எழுத்துக்கள், உண்மையிலே வாளைவிட வல்லமை யுள்ளவைகளாக யிருக்கின்றன. என்பதை யாரேமறுக்க வல்லார்?

# பட்டக்காரர் படத்திறப்பு

தமிழ்நாடு நீர் வளமும் நில வளம் பொருந்திய நாடு. மூலப் பொருள்கள் நிறைந்துள்ள நாடு. மின்சார வசதி பெற்றுள்ள நாடு. அவ்வாறு இருந்தும் இன்று தாழ்வுற்றிருக்கிறது; உண்ண உணவுக்கும் உடுத்தும் உடைக்கும் பிற நாட்டை எதிர்நோக்கி வாழ வேண்டிய நிலையிலிருக்கிறது.

இதற்கு பலகாரணங்கள் உள்ளன. இவற்றுள் இவ்வளங்களை பயன்படுத்தும் ஆற்றலை தமிழர்கள் இழந்து விட்டனர் என்பது ஒன்று. இக்காரணத்தை நன்கு அறிந்தவர் தான் கோவை ஜில்லாவில் வாழ்ந்த தமிழ் பழங்குடி பெருமகனரான பழையக்கோட்டை பட்டக்காரர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் என்பவர். இவர் இக்காரணத்தை அதாவது இவ்வளவு வளம்பொருந்திய நாட்டை மக்கள் சரியானபடி பயன் படுத்தவில்லையே என்பதை யறிந்தார்.

தமிழ்நாடு செழிக்க வேண்டுமானல், பயிர்த்தொழில் பெருக வேண்டும். பயிர்த்தொழில் பெருகுவதற்கு கால்நடைகள் அவசியம் என்பதைக் கண்டார். தமிழ் மக்கள் வாழ்வுதான் தேய்ந்து வருகிறதென்றல், தமிழ் நாட்டில் வாழும் கால் நடைகளும் தேய்ந்து வருகின்றன. என்பதைத் தெரிந்தார் கால் நடைகளுக்கும் வெளி நாட்டையே எதிர் நோக்கியிருக்க வேண்டிய நிலைமை ஏற்படுமோ என்று அஞ்சவேண்டியிருந்தது. இந் நிலைமையைப் போக்கியவர் பழைய கோட்டைப் பட்டக்காரரே யாவர்.

தேய்ந்து கொண்டிருந்த கால் நடைகளை, புதிய நவீன முறையைக் கையாண்டு இந்தியா வெங்கும் புகழும் காங்கேய வர்க்கம் என்ற புதுரகக் கால் நடைகளை உற்பத்தி செய்தார். இவைகள், உடலுறுதியும், கட்டழகும் வலிமையும், உழைப்பும் உடையவைகள். இவைகள் நூற்றுக்கணக்கில்பெருகிவிட்டன. பயிர்த்தொழில் முன்னேற்றத்திற்கு இத்தகைய கால் நடைகள் பெரிதும் பயன்படும். இவ்வளவு அரும் பெருங் காரியத்தை சாதித்து தமிழ் நாட்டுக்கு பெரும் பேற்றைத் தேடித்தந்த பெரியார் இப்பொழுது நம்மிடையில்லை யென்றாலும், அவர் செய்த அரும் பெருங் காரியங்கள், நம்மிடையே இருந்து வருகின்றன.

அதை அவரது திருக்குமாரர்களான பழய கோட்டை பட்டககாரர் நல்ல சேனதிபதி சர்க்கரை மன்றாடியாரும், நமது இயக்க உப தலைவரான தோழர் ந. அர்சுனன் அவர்களும் தொடர்ந்து செய்து வருகின்றார்கள். அத்தகைய பெரியாரின் திருவுருவப் படத்தை கோவை ஜில்லா போர்டு அலுவலகத்தில் சென்ற 27-8-48ல் மாபெரும் கூட்டத்தின் முன் தோழர் T. A. ராமலிங்கம் செட்டியார் அவர்கள் திறந்து வைத்தது பாராட்டத்தக்கதும், மகிழ்ச்சிக் குரியதுமாகும். படத்திறப்பு மட்டும் போதாது, தமிழ்நாடு அவருக்கு சிலை நாட்டு விழாவாற்றவும் வேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

அடி படத் திறப்பு விழாவிற்கு தோழர் V. C. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்கள் தலைமை வகித்தார். காலஞ்சென்ற பட்டக்காரர் அவர்கள், கோவை ஜில்லா போர்டு இரண்டாகப்பிரிக்கப்பட்டிருந்த காலத்தில் ஈரோடு ஜில்லா போர்டுக்கு தலைவராகயிருந்தார். மற்றும் கோவை ஜில்லா போர்டில் நீண்டகாலமாக உறுப்பினராக இருந்து வந்திருக்கிறார். சென்னை சட்ட சபை மேல் சபையிலும் சிறிது காலம் அங்கம் வகித்து வந்திருக்கிறார்.

காலஞ்சென்ற, பட்டக்காரர் அவர்கள் தேய்ந்த கால் நடைகளை வளர்ப்பதிலும் மட்டுமல்ல ஒடிந்த உள்ளமுடைய மக்களை வளர்ப்பதிலும் சிறந்து விளங்கினர். தமிழரின் பண்பை விளக்கும் குன்றின் மேலிட்ட விளக்கென விளங்கினர். அத்தகையாருக்கு தமிழ்நாடு சிலை நாட்டுதல் மிகப்பொருத்தமான காரியமாகும் என்றே கருதுகின்றோம்.

## சுயமரியாதைக் கல்யாணம்.

"சுயமரியாதைக் கல்யாணம் என்பது மணமக்கள் ஒருவரை ஒருவர் தெரிந்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும், அர்த்தமும் பொருத்தமும் அவசியமும் இல்லாமல் வெறும் சடங்கு பழக்க வழக்கம் என்பதற்காக மாத்திரமே ஒன்றையும் செய்யக்கூடாது என்பதுமே யாகும்."

★ ★ ★

'சுயமரியாதைக் கல்யாணம் என்பது பெண்ணும் ஆணும் சேர்ந்து வாழ்க்கையை நடத்த ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தமென்பதும், அவ்வொப்பந்த விஷயம் ஆணையும் பெண்ணையும் மாத்திரமே பொருத்ததே ஒழிய வேறு எவ்வித தெய்வீகத்துக்கோ அல்லது எவ்வித கட்டுப்பாட்டுக்கோ சம்பந்தப்பட்டதல்ல என்பதேயாகும்.

★ ★ ★

"வாழ்க்கைக்கும் மனத்துக்கும் ஏற்ற தம்பதிகளானால் கூடிவாழலாம். அவைகளுக்கு ஒவ்வாத வாழ்க்கையே "நரகம்" போன்றதான தம்பதிகளானால் பிரிந்து மனத்திற்கு ஏற்றவர்களை மணந்து இன்ப சுக வாழ்வு வாழ உரிமையுண்டு என்பதோடு புருஷனோ மனைவியோ யார் இறந்துபோனாலும் மறுமணம் செய்து கொள்ளலாம்"

## யார் நாஸ்திகன்?

"பார்ப்பனர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு ஆக உண்டாக்கிவிட்ட கடவுள்களையும் அவைகளின் பெண்டுபிள்ளைகளையும் அவைகளின் 4—வது 2 பெண்டாட்டி, 1000 வைப்பாட்டி என்பவைகளையும், அக் கடவுள்கள் செய்த கொலை கொள்ளை விபசாரம் கொடுமை ஏமாற்றம் சூழ்ச்சி ஆகிய இழிதன்மைகளையும் எவன் ஒப்புக்கொள்வதில்லையோ,

இம்மாதிரி கடவுளுக்கு செய்த செய்யும் உற்சவம், பூஜை, அபிஷேகம், கோயில் கட்டுதல், சமாதாரனை செய்தல், வேத பள்ளிக்கூடம் வைத்தல் ஆகிய வழிகளில் பணத்தைஎவன் பாழாக்க சம்மதிப்பதில்லையோ,

எவன் இவைகளுக்கு ஆதாரமான வேத புராண சாஸ்திரங்களை ஒப்புக் கொள்ளுவதில்லையோ, அவன்தான் நாஸ்திகன்."

## பகுத்தறிவுக்கு விரோதிகள் யார்?

"மதம், சமயம், கடவுள், குரு, புரோகிதன், வேதம், சாஸ்திரம், புராணம், ஆகமம், சிவன், விஷ்ணு பிர்மா, சில்லரைத் தெய்வங்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், ரிஷிகள், முனிவர்கள் இன்னமும் அநேக சங்கங்கள் பகுத்தறிவுக்கு விரோதிகள்."

## தேசீயம்

"பொதுவாக தேசீயம் என்னும் வார்த்தை அர்த்தமற்றது; மோசக் கருத்துக் கொண்டது; அது பணக்காரத் தன்மையை ஆதரிப்பதற்கென்று கற்பிக்கப் பட்டதாகும்"

"இந்திய தேசாபிமானம் என்பது இன்று இந்த தேசப் பணக்காரர்களுடைய சௌகரியங்களைக் குறிப்பாய்க் கொண்டதும், பணக்காரர்கள் பணவருவாய் முறையைச் சிறிதும் மாற்ற முடியாததும், பணக்காரர்களுக்கு பணம் பெருகிக்கொண்டு வளர்ந்து கொண்டு போவதைத் தடுக்க முடியாததும், தேசத்தின் செல்வம் எல்லாம் ஒருவன் கைக்குச் போவதானாலும் ஆட்சேபிக்க முடியாதது மான கொள்கைதான் (தேசாபிமானத்தில்) இருந்து வருகிறதே தவிர தேசம் தேசமக்களுக்குப்பொது, தேசத்தின் செல்வம், விளை பொருள், வர்த்தகம், போக்கு வரத்து, தொழிற்சாலை ஆகியவைகளின் பலன்கள் இந்த தேசத்து எல்லா மக்களுக்கும் பொது என்று சொல்லக் கூடிய காரியங்கள் தேசாபிமானத்தில் இல்லவே இல்லை; அதை இதில் சேர்த்துக் கொள்ள மகாத்மாக்கள் என்பவர்கள் முதல் எந்த தேசபக்தர்களும் சம்மதிப்பதுமில்லை.

## சுக வாழ்க்கைக் குரிய வழி

"இந்த தேசத்தில் ஏற்பட்டிருக்கும் ஜனசமூக அமைப்பின் அஸ்திவாரமே சரியாய் இல்லாமல் இருக்கிறது அந்த அஸ்திவாரத்தின் மீது கட்டக்கூடிய எந்த அமைப்பும் ஜனசமூகத்திற்கு நன்மை யளிக்கக் கூடியதல்ல.

"ஒரு தகப்பன் வயிற்றில் பிறந்த பிள்ளைகளுக்கு எப்படிச் சம அந்தஸ்தும், சம உரிமையும் உண்டோ அப்படியே ஒருதேசத்தில் பிறந்தவர்களுக்கும் இருக்க வேண்டியது அவசியமாகும். அப்போது தான் மக்கள் சுகமாக வாழ முடியும்.

"தற்போதிருக்கும் நிலையில் சுயராஜ்யம் வந்தால் குருட்டு நம்பிக்கையும் வைதீகமும் தான் வலுக்கும்

"ஏழைகள் துயரத்தைப் போக்க இந்திய சுயராஜ்யம் இப்போது சிலரால் கருதப்படும் முறையில் யாதொரு நன்மையும் கொடுக்கப் போவதில்லை என்பது நிச்சயம்.

"சமதர்மத்தையும் பொதுவுடமையையும் அஸ்திவாரமாகக் கொண்ட ராஜாங்க அமைப்பொன்றே மக்கள் சுகவாழ்க்கைக் குரிய வழியாகும். இதற்காக என் நாம் தியாகம் செய்யத் தயாராயிருக்கக் கூடா தென்று கேட்கிறேன்"

## திருப்தியாக வாழ

"பல நூற்றாண்டுகளாக உலக வாழ்க்கையில் கடவுள் செயல் என்றும் இயற்கை யென்றும் கருதும்படியாகச் செய்து நிலை நிறுத்தப்பட்டு நடைபெற்று வரும் சமூக அமைப்பையும் பொருளாதார முறையையும் மாற்றுவது என்பது சிலருக்கு இஷ்டப்படாத காரியமாயிருந்தாலும், அவ்வாறு மாற்றி அமைத்தாலொழிய மக்கள் வாழ்க்கைகளில் உள்ள அனேக கஷ்டங்களும் குறைகளும் நிவர்த்தியாகி சௌக்கியமாகவும் திருப்தியாகவும் வாழ முடியாது"

## சமதர்மம்

"சமதர்மம் என்றால் சாதாரணமாக பாரபட்சமற்ற நீதி, சமத்துவம், பேதமற்ற அதாவது உயர்வு தாழ்வு இல்லாத நிலை என்பதாகும்.

ஆனால், இன்றைய வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்திலும் அதாவது ஜாதியில், கல்வியில், செல்வத்தில், வாழ்க்கை அந்தஸ்து நிலையில் மேல் கீழ் நிலையிருந்து வருகிறது.

இவற்றை ஒழித்து யாவற்றிலும் சமத்துவத்தை நிலைநாட்டுதற்கு சமதர்மக் கொள்கை ஆட்சி அவசியம் என்றால் மதக்காரர்களுக்கும் கடவுள் நம்பிக்கை கொண்ட ஆஸ்திகர்களுக்கும் கஷ்டமாயிருக்கிறது.

உழைப்பாளி மக்கள் உடல் வருந்தி உழைத்த பின்னும் குடிக்கக் கூழின்றியும் கட்டக் கந்தையின்றியும், குடியிருப்பதற்கு ஓட்டைக் குடிசைகூட இல்லாமல் பரிதவிக்கும் பொழுது எந்த விதமான வேலையும் செய்யாது, பணக்காரனை இருக்கின்ற சந்தர்ப்பத்தால் அக்கிரமமாக அநீதியாக தொழிலாளிகளைக் கொடுமைப் படுத்திக் கொண்டு தான்மட்டும் படாடோபமாக, டம்பாச்சாரித் தனமாக் வீண் விரயமாக்குவது சரியல்ல; எல்லோரும் கஷ்டப்பட்டு செய்து பலனை எல்லோரும் சமமாக அனுபவிக்கலாம் என்று சொன்னால் அது முதலாளிகளுக்கும் பணக்காரர்களுக்கும், ஜமீன்தார், மிட்டாதார் முதலியவர்களுக்கும் விரோதம் என்று வீண் கூக்குரலிடப் படுகிறது.

சாதாரணமாக இன்று ஒரு குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஆளுக்கொரு வேலை செய்து சமமாக உண்டு உடுத்திக் களிப்புடன் வாழ்க்கை நடத்தவில்லையா? அதுபோலவே, ஒரு கிராமம், ஒரு ஜில்லா, ஒரு மாகாணம், அல்லது தேசத்திலுள்ள சகல மக்களும், ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போலவும், உள்ள பூமியும் பொருளும் எல்லாம் குடும்பச் சொத்துபோல் எல்லா மக்களுக்கும் பொதுவாகிய அக் குடும்பத்துக்குச் சொந்தமே அன்றி தனித்தனியாக அவனவன் இஷ்டம் போல் அனுபவிக்கும் தனி உரிமை யாருக்கும் இல்லை. எல்லோரும் ஒன்றுபட்டு ஆளுக்கொரு வேலை செய்து உண்டு உடுத்தி இன்ப வாழ்வு வாழ வேண்டுமென்பதுதான் **சமதர்மம்** மற்றபடி இதில் பயப்படத் தக்க காரியமும் புரியாத காரியமும் இல்லை."

## இளைஞர்கள்.

"இளைஞர்கள் என்பவர்கள் தூய்மையான மனதைபுடையவர்கள்.

அவர்கள் உலக வாழ்க்கை வியாபாரத்தில் நுழையாதவர்களாதலால் அவர்கள் எண்ணமும், காரியமும் ஒன்றாய் இருப்பதற்குச் சௌகரியம் உண்டு.

ஆனால் அவர்களுக்குப் போதிய உலக அனுபவம் ஏற்படக் காலமில்லை. ஆதலால் இளைஞர்கள் திடீரென்று எந்தக்காரியத்திலும் பிரவேசித்து விடக்கூடாது.

விஷயங்களை ஆலோசித்துப் பார்க்க வேண்டும். தங்கள் எண்ணங்களுக்கும், செய்கைகளுக்கும் அனுபவ பலன் என்ன? அது எப்படிப்பட்டது? என்பதை நடுநிலைமையிலிருந்து யோசித்துப் பார்த்து சரித்திரங்களையும் சம்பவங்களையும் அறிந்தே ஒரு துறையில் இறங்கவேண்டும்."

## நாடகம்.

"நாடகம் என்பது ஒரு விஷயத்தைத் தத்ரூபமாய் நடித்துக் காட்டுவது என்பதோடு அதைப் பெரிதும் மக்களின் நடத்தைக்கு வழி காட்டியாகவும் ஒழுக்கங்கள் கற்பிக்கப் படுவதற்குப் பயன்படுத்தப் படுகின்றது என்று சொல்லப்படுகின்றது.

'ஆனால் அது அந்தப்படி தத்ரூபமாய் நடத்திக் காட்டப்படுவதும் இல்லை. மக்கள் ஒழுக்கத்துக்கும் நடப்புக்கும் வழிகாட்டியாய் நடப்பிப்பது மில்லை என்று சொல்லவேண்டி யிருக்கிறது. தத்ரூபங்களின் ரச பாவங்கள் உண்மையாய் நடந்திருக்கும் என்று நினைக்கும்படியான எண்ணம் ஜனங்களுக்கு தோன்ற வேண்டும்.

★ ★ ★

"நாடகங்களுக்கு நடிப்புகளில் மிக விசேஷ சமயங்களில் அல்லது அசல் விஷயத்திலேயே பாட்டுவரும் சந்தர்ப்பங்களில் தவிர மற்ற சமயங்களில் பாட்டுகள் பொருத்த மற்றது என்பது நமது அபிப்பிராயம்.

"நாடகம் நடிக்கப்படும் கதைகள் விஷயமும் தற்கால உணர்ச்சிக்கும் தேவைக்கும் சீர் திருத்த முறைக்கும் ஏற்றதாயில்லாமல் பழமையைப் பிரசாரம் செய்யவும் மூட நம்பிக்கை வர்ணாச்சிரமம், சாதி வித்தியாச உயர்வு தாழ்வு, பெண்ணடிமை, பணக்காரத் தன்மை முதலிய விஷயங்களைப் பலப்படுத்தவும் அவைகளை பாதுகாக்கவும் தான் நடிக்கப்படுகின்றதே ஒழிய வேறில்லை.

"இப்படிப்பட்ட கதைகள் ஒழிக்கப்படவேண்டும். சுயமரிதையும் சீர்திருத்த வேட்கையு முள்ளவர்கள் அவைகளில் நடிக்கக்கூடாது."


**உதயம்**
சந்தா விபரம்:

உள்நாடு:-

| | |
|---|---|
| வருடச்சந்தா ரூ | 5—0—0 |
| 6 மாதச்சந்தா ரூ | 2—8—0 |
| தனிப்பிரதி சந்தா ரூ | 0—1—3 |

வெளிநாடு:-

| | |
|---|---|
| வருடச்சந்தா ரூ | 7—0—0 |
| 6 மாதச்சந்தா ரூ | 4—0—0 |

மானேஜர்,
"உதயம்"
திருவத்திபுரம். N.A.


Printed by M. Vedapuri Mudaliar at Sri Lakshmi Press 207, Bazar St., Tiruvettipuram. Edited, and Published by M. Kandaswamy, at Tiruvettipuram. (N. A.)